விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
நாடுகள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 09 வெள்ளிக்கிழமை (21.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 64

### பாதிரியாரின் ஏற்பாட்டில் வந்த அடாவடிக்குழு

# வலம்புரி அலுவலகத்தில் உள் நுழைந்து அட்டகாசம்

## எழுவைதீவிலிருந்து அனுப்பி வைப்பு


எழுவைதீவிலிருந்து வந்த அடாவடிக்குழு


அடாவடிக்குழு வந்த தனியார் பஸ்


பொலிஸ் விசாரணை

(யாழ்ப்பாணம்)
எழுவைதீவில் இருந்து வந்த சுமார் 30 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று வலம்புரி அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டது. (23ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனுடன் மகிந்த அரசு செய்த கூட்டு உடன்படிக்கை காரணமாகவே



### ஐ.நாவுடன் இணங்கிச் சென்றோம் – பாராளுமன்றில் சஜித் பிரேமதாச

(கொழும்பு)
போர் முடிவுக்கு வந்து சில தினங்களுக்குள் அன்றைய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் அரசாங்கம் செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கையின் காரணமாகவே இலங்கை, மனித உரிமை மீறல் 23

### அடாவடிக்குழுவை நடத்தும்

## பாதிரியாருக்கு எதிராக திருச்சபைக்கு அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
தீவகத்திலுள்ள பாதிரியார் ஒருவர் சைவசமயத்துக்கு எதிராக செயற்பட்டு சமய நல்லிணக்கத்துக்கு குந்தகம் செய்வது பற்றியும் அடாவடிக்குழுக்களை இயக்கி ஊடகத்துக்கு அச்சுறுத்தல் விடுகின்ற அவரின் பயங்கரவாதப் போக்கை விளக்கி வத்திக்கானில் உள்ள திருச்சபைக்கு தெரியப் 23

## எரிபொருள்விலை குறைக்கப்படாது

### அமைச்சர் பந்துல

(கொழும்பு)
எரிபொருள் விலை குறைப்புத் தொடர்பில் அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 23

## ஐ.நாவை நிராகரித்தால் சர்வதேசமட்டத்தில் இலங்கை தனிமைப்பட நேரிடலாம்

### பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர

(கொழும்பு)
ஜெனிவா பிரேரணை குறித்து அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்மானம் பாரதூரமானது எனவும், சர்வதேச மட்டத்தில் இலங்கையை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை 23

## புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)
வலம்புரி அலுவலகத்திற்குள் நுழைந்து பெரும் அட்டகாசம் செய்த குழுவில் அறியாத்தனமாக சிலர் இடம்பெற்றிருந்த காரணத்தினாலும் தங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க வேண்டாம் என அவர்களில் சிலர் கேட் 23

## உலக சைவ மாநாடு யாழில் இன்று ஆரம்பம்

### இந்துக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு மறவன்புலவு சச்சிதானந்தன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
உலக சைவ மாநாடு யாழில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்றையதினம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் பிள்ளையார் விடுதியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள உலகச் சைவ மாநாட்டில் அனைத்து 23

## நீதித்துறையின் மீது அழுத்தம் கொடுக்கப்படமாட்டாது

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



(கொழும்பு)
நீதித்துறையின் சுதந்திரம் சரியான வகையில் மக்களின் நலன்களுக்காக செயற்படுத்தப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவும் 23

## பாராளுமன்ற கடைசி அமர்வு

(கொழும்பு)
தற்போதைய பாராளுமன்றத்தில் இறுதி அமர்வு நேற்று இடம் பெற்றது. இது தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரிய தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். தற்போதைய பாராளுமன்றத்திற்கு 41/2 வரு 23

## ஊர்காவற்றுறை
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கிளைக்குழுத் தெரிவிற்கான
## கிளைப் பொதுச் சபைக் கூட்டம்

**திகதி: 23.02.2020 ஞாயிற்றுக்கிழமை | காலம்: முற்பகல் 10 மணி**

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 08 | நாரந்தனை தெற்கு | முன்பள்ளி நிலையம் நாரந்தனை |
| 12 | சரவணை மேற்கு | கந்தசுவாமி கோவில் மண்டபம் |
| 14 | எழுவைதீவு | கிளைக் கட்டிடம், எழுவைதீவு. |

சகல கிளைப்பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்றுக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**செயலாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்** (C-9299)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி பரீட்சைகள் 2018/2020
## (பகுதி நேரம் I) இரண்டாம் அரையாண்டு

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 09,14,15 பங்குனி 2020 ஆகிய தினங்களில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 24/02/2020ம் திகதி முதல் 02/03/2020 ஆம் திகதி வரை கல்வியியற்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை கல்வியியல் துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைக்கான நேரஅட்டவணையை கல்வியியல் துறை அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ரூ.300/-ஐ பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ (கணக்கு இல. 162-1-001-8-0000902) செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

தெளிவற்ற மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
20.02.2020 (C-9295)

குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் பெருமையுடன் வழங்கும்**

## மனவளக்கலையின் மருத்துவ விளக்கம்

வேதாத்திரியத்தின் சூட்சுமத்தை விளக்க வருகிறார் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் தலைமையானவராகத் திகழும் இதயநல மருத்துவர் **Dr.V.சொக்கலிங்கம்** அவர்கள்.

- புதிரான நோய்களுக்கு புதிதான விளக்கங்கள்
- உடற்பயிற்சியினால் உள்ளே நடைபெறும் மாற்றங்கள்
- தியானத்தில் மேன்மை பெற்றிட
- அன்பர்களின் அனைத்து ஐயப்பாடுகளும் நீங்க

**காலம் :** *22.02.2020 (சனிக்கிழமை)* **நேரம் :** *மாலை 4.30 மணி*
**இடம் :** *யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்*

*அனைவரும் அலையெனத் திரண்டு வாரீர்*

### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது
யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- **எளியமுறை உடற்பயிற்சிகள்**
- **காயகல்ப்பப் பயிற்சி**
- **எளியமுறைத் தியானங்கள்**

கற்றுத்தரப்படவிருக்கின்றன.
பயிற்சிகளை வழங்குவதற்கு **தமிழ்நாட்டின் தலைசிறந்த பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியை அருள்நிதி லில்லிபாய் அவர்கள்** வரவழைக்கப் படுகிறார்கள். எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் பயன் படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

காலம் : *23.02.2020 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 28.02.2020 வெள்ளிக்கிழமை வரை*
நேரம் : *மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை*
பயிற்சிகளை வழங்குபவர்கள் : **மனவளக்கலை பேராசிரியை அருள்நிதி லில்லிபாய், துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்**

*அகத்தாய்வு 2ம் நிலை 22.02.2020 சனி மற்றும் 23.02.2020 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.*

## யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:- 0212222772 (C-9294)

# University of Jaffna, Sri Lanka
# Faculty of Arts
# Walk - in - Interview

Walk in Interview for the appointment of **Temporary Assistant Lecturer in Law** will be held on 25.02.2020 at 9.30 am in the **Mini Board Room of the Faculty of Arts,** University of Jaffna.

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer**

1. A degree with specialization in the relevant subject with first or second class (upper division) Honors.
   Or
2. A degree with specialization in the relevant subject with second class (Lower division) Honors.
   Or
3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least second class Honors and
   (b) A recognized postgraduate degree in the relevant subject.

**Note:-** candidates who are awaiting results of the final Degree examination may also be present for the above interview.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the abovementioned post with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and self prepared application.

**Registrar**
**University of Jaffna** (C-9288)

## தேவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் தண்ணீர் தொழிற்சாலைக்கு தண்ணீர் விற்பனை செய்யும் முகவர்கள் தேவை. விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: (C-9290)
**0214928990, 0760678738**

## விற்பனைக்கு

- சீமெந்து கலவை இயந்திரம் (Mixer)
- பவுசர்
- சீமெந்து கலவை தூக்கி (Hoist)
- அலுமினிய பார் வகைகள்

தொடர்புகளுக்கு:- (C-9291)
**0763172383**

## WEL CARE CLINIC
**வெல்கெயர் வைத்திய நிலையம்**

**நுணாவில் சந்தி, Church அருகே**
**Dr. தயாளன் கிளினிக் இருந்த இடத்தில்**

**சேவைகள்**

- OPD காலை 8.30 - 11 மணிவரை
  மாலை 4.30 - 6 மணி வரை
- இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள்
- வைத்திய நிபுணர்கள் சேவையும் உண்டு

**Specialist Consultation** (2334)

**தொ.இல:-**
**077 873 0129**

## 3ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




## அமரர் தெய்வசிகாமணி நாகரத்தினம்

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி துயர் பகிர்ந்தோருக்கும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசிகள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மலர்மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (21.02.2020) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். *ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இல.6, புதுவீதி, ஆறுகால்மடம்,**
**ஆனைக்கோட்டை** (2335)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# உறவுகள் கிடைக்கும்வரை போராட்டங்கள் தொடரும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி தெரிவிப்பு

(முறிகண்டி)

எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தினை நாங்கள் தொடர்வோம் எனவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேற்கொண்ட போராட்டத்திலேயே வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாங்கள் இந்தப் போராட்டத்தை தொடர் போராட்டமாக ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. நான்காவது ஆண்டில் போராட்டத்தை இன்று ஆரம்பித்துள்ளோம். இன்றுவரை எமது உறவுகள் தொடர்பான போராட்டத்திற்கு முடிவு எட்டப்படவில்லை. நாம் எமது உறவுகளை தேடி தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசின் மீது சர்வதேசம் கடுமையான அழுத்தங்களை வழங்க வேண்டும்.

நடைபெறவுள்ள மனித உரிமைகள் அமர்வின்போது இலங்கை அரசிற்கு கடுமையான அழுத்தங்களை சர்வதேசம் முன்வைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பில் அரசாங்கம் சர்வதேசத்திடம் பதில் சொல்ல வேண்டும் என தெரிவித்தார். ஓ.எம்.பி அலுவலகத்தை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அந்த அலுவலகத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை.

இலங்கை அரசுக்கு கால அவகாசங்கள் வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் எதையும் எமக்குச் செய்யவில்லை. எமது உறவுகள் தொடர்பில் உண்மை நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில் மீண்டும் கால அவகாசங்களை வழங்காது. அரசுக்கு கடுமையான அழுத்தங்களை சர்வதேசம் பிரயோகிக்க வேண்டும். எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தினை நாங்கள் தொடர்வோம்

கடந்த காலங்களில் மனித உரிமைகள் அமர்விற்காக எமது பிரதிநிதிகள் அங்கு செல்வார்கள். அதேபோன்று இம்முறையும் எமது பிரதிநிதிகள் செல்வார்கள்.

அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-100)

# ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவின் உதயத்துடன் பெரும்பான்மை உறுதி -வீரகுமார



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றின் தலைமைத்துவத்தின் கீழ் "ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன" பதிவு செய்யப்பட்ட போதே பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுதிப்படுத்தப்பட்டது என என்று சுதந்திர கட்சியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்விரு கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் பிரார்த்தனையாக இருந்தது. இரு கட்சிகளினதும் தனித்துவத் தன்மையை பாதுகாத்துக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த கூட்டணி பொதுத் தேர்தலில் வெற்றியை உறுதி செய்யக்கூடியவகையில் பலமானதாக உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


# திருமண வாழ்வில் - வைர விழா



"குகன் குடிசை" பொலிகண்டியிலிருந்து 2020.02.21 இன்று திருமண வாழ்வில் அறுபது (60) ஆண்டுகள் நிறைவுசெய்து கந்தவனநாதரின் அருளால் "வைரவிழாக்" காணும்

## முருகுப்பிள்ளை சின்னத்துரை [சிவப்பிரகாசம்]
## சின்னத்துரை சூரியகாந்தி [சூரியா]

சமாதான நீதவான், ஆணை பெற்ற மொழிபெயர்ப்பாளர், ஆங்கில ஆசான்,
"குகன் இங்லிஷ் சென்ரர்" ஸ்தாபகர் (ஓய்வு நிலை அரச அலுவலர்)



அன்பான பண்பான கருத்தொருமித்த
கணவன் மனைவியாய்
திருமணவாழ்வில் ஏற்கனவே
"பொன் விழாவை நிறைவு செய்து தற்போது
"வைரவிழாவை" நிறைவுசெய்யும் எமது
முதன்மை குடும்ப விளக்குகளே!
மணிமணியாய் ஐந்து பிள்ளைச்
செல்வங்களைப் பெற்றீரே!
சிறப்புடனும் பண்புடனும் வளர்த்தீரே!
மாணிக்கமாய் மருமகனும் பவளங்களாய்
மருமகள்மாரும் வந்தடைந்தனரே!
முத்து முத்தாய் பதினொரு (11) பேரப்பிள்ளைகள்
காணப் பெற்றீரே!
எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற
பிரார்த்தனையோடு வாழ்பவரே!
நீவிர் இன்றுபோல் தொடர்ந்தும் மனம்குளிர வாழ்வீரே!
இதற்கு கந்தவனநாதரின் அருளை வேண்டி நிற்போமே!

வாழ்த்துவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சடகோபன் - ஜெயம், தயாபரன் - ஐமுனா, கிரிதரன் - ரூபிகா, நந்தினி - சிவலிங்கம், குகபரன் - தாரணி
கோகுலா, சுகன்யா, மயூரா, டிசான், மிதுஷாயினி, லிஷாயினி, அம்பிகன், தனுசன், சபேசன், லக்ஷனா, அவிஸ்னா
T.P: 077 776 6485, 076 050 9512
(2075)

# தலைவராக மீண்டும் மலிங்க

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனானா மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச இரு பதுக்கு - 20 கிரிக்கெட் தொடருக்கான இல ங்கை அணிக்கு லசித் மலிங்க தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசித் மலிங்க தலைமையிலான இல ங்கை இருபதுக்கு - 20 கிரிக்கெட் அணி யானது இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா வுடனான இருபதுக்கு : 20 தொடர்களில் மோசமான தோல்வியை சந்தித்திருந்தது. இதன் பின்னர் இருபதுக்கு : 20 போட்டிகளுக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியை மாற்ற இலங்கை கிரிக்கெட் நிறுவனம் பரீசிலித்து வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்நிலையிலேயே மலிங்க மேற் கிந்தியத்தீவுகள் அணியுடனானா இரு பதுக்கு - 20 தொடருக்கு இலங்கை அணித் தலைவராக செயற்படுவார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது குறித்து நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரை யாற்றிய மலிங்க, நாங்கள் எங்கள் சொந்த மண்ணில் விளையாடவுள்ளோம். போட் டியை வெல்ல இது எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும். ஆகவே எங்கள் அனைவருக் கும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள் கிறேன் என்றார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டி முடிவடைந்ததும், இலங்கை இருபதுக்கு - 20 தொடருக்கான அணி அறிவிக்கப்படும் என நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

# கைதடி முதியோர் இல்லத்தில் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்கள 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சின் கீழ் இயங்கும் சமு தாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியவர்களை மகிழ்விக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, அரச முதியோர் இல்ல வளாகத்தில் சிரமதானப்பணிகள் மேற் கொள்ளப்பட்டதோடு, முதியவர்களை மகிழ்விக்கும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், முதியோர் இல்ல அத்தியட்சகர் வீ.செல்வம், வடமாகாண சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்கள சிரேஷ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.அனஸ், சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முதியோர் இல்ல உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம)





## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் (Council)-2020
## கரைச்சி பிரதேச சபை- கிளிநொச்சி

1.தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி வடமாகாணம், கரைச்சி பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரு கின்றார்.

2.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3.கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மாகவும் இருத்தல் வேண்டும்.

4.தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி IV இல் காட்டப்பட்டுள்ளது. மேதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

5.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், கரைச்சி பிரதேசசபை,A9வீதி, கிளிநொச்சி (தொலைபேசி : 021-228 5761, தொலைநகல 021-228 5690) மின்னஞ்சல் kilinochchi1kps@gmail.com இல் இருந்து மேலதிக தவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.30 மணி முதல் பிற்பகல் 14.00 மணிவரை 11.03.2020ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங் கிலமொழியில் தவிசாளர், கரைச்சி பிரதேசசபை, A9வீதி,கிளிநொச்சி எனும் இடத்தில் 24.02.2020ம் திகதியிலிருந்து 11.03.2020 வரை காலை 09.30மணிக்கும் பி.ப 14.00மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00(வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

7.கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 11.03.2020ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகை குழுவிற்கு அதிகாரம் உண்டு.

-27.05.2020) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9.கேள்விகள் தொடர்பான இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.

10.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை . (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| NP/Council/KPS/KI/StreetLight/KAPS/G-50w/2020 | வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல் ~ 50w (Supplying & Fixing single water proof street Lamp 50W) | 2.97 | 01 மாதம் | அங்கீகரிக் கப் பட்ட நிறுவனம் | 23,100.00 | 24.06.2020 |
| NP/Council/KPS/KI/StreetLight/KAPS/G-100w/2020 | வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல் ~ 50w (Supplying & Fixing single water proof street Lamp 100W ) | 1.49 | 01 மாதம் | அங்கீகரிக் கப் பட்ட நிறுவனம் | 14,500.00 | 24.06.2020 |

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 06.03.2020ம் திகதி பி.ப 14.30 மணிக்கு, தவிசாளர்,கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

(c-9297)

தலைவர்
பெறுகைக் குழு
கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி
கிளிநொச்சி, வடக்கு மாகாணம்

20.02.2020

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி இறைச்சிக் கடைகளுக்கான 01.03.2020-31.12.2020 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும்சந்தை, இறைச்சிக் கடைகளினை01/03/2020 – 31/12/2020வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி,பகிரங்கஏலத்தில் விடுவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.ஏலக் கேள்விகள் 03/10/2019ஆம் திகதிய தினக்குரல்,வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனை களுக்குஅமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 28/02/2020காலை 10.30 மணிக்குநடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமைஅலுவலகத்தில் கேள்விவைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை24/02/2020தொடக்கம் 28/02/2020முற்பகல் 10.00 மணிவரைபெற்றுக் கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகைவிபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புபணம் | ஆகக் குறைந்தஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாதவாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடிஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 42585.00 | 100.00 |
| 02 | கோயிற்சந்தைகோழியிறைச்சிக்கடை | 1000.00 | 172335.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்துகொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத் தினை2020/02/28ஆம் திகதி காலை10.00மணிக்குமுன் செலுத்துவதுடன்,சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாகஏலத் தொகையின் 1/3பங்குபாதுகாப்புவைப்புப் பண த்தை செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

க.த.ஜங்கரன்,
தவிசாளர்,
வடமராட்சிதெற்குமேற்குபிரதேச சபை,
கரவெட்டி.
20/02/2020


(c-9296)

# மகா சிவராத்திரி தினக் கொண்டாட்டத்தில் இந்துக்களுடன் நானும் இணைந்து கொள்கிறேன்

## ஜனாதிபதி கோட்டாபய மகிழ்ச்சி

(கொழும்பு)

உலகெங்கும் வாழும் இந்து சமய பக்தர்கள் விரதம் இருந்து மிகுந்த பக்தியுடன் அனுஷ்டிக்கும் மகா சிவராத்திரி தினக் கொண்டாட்டத்தில் இலங்கை வாழ் இந்துக்களுடன் நானும் மகிழ்ச்சியுடன் இணைந்து கொள்கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.



இந்து சமய பஞ்சாங்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களில் ஒன்றான மகா சிவராத்திரி தினத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு சமயக் கிரியைகளின் மூலம் துர்க்குணங்களில் இருந்த விலகி உளத்தூய்மையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

பல்வேறு சிக்கல்கள், முரண்பாடுகளுக்கு மத்தியில் முன்னோக்கிச் செல்லும் இன்றைய உலகில் மனிதனுக்கு உள அமைதியைச் தருவது சமயமாகும். எமது சகோதர தமிழ்ச் சமூகத்தினர் உட்பட அனைத்து இலங்கையர்களும் புத்தெழுச்சியுடன் புதியதோர் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புடன் இருக்கின்ற இச் சூழ்நிலையில், முன்னெப்போதும் இல்லாத வகையில் சமய நல்லிணக்கத்துடன் நாட்டின் அனைத்து இனங்களும் தமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் இருப்பதையிட்டு நாட்டின் தலைவர் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்புனித மகா சிவராத்திரி தினத்தில் ஏற்றி வைக்கப்படும் தீப ஒளி அனைவரினதும் ஆன்மீகத்தை ஒளி பெறச் செய்யட்டும் என நான் பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# எம்.சி.சி. உடன்படிக்கையில் அரசு கையெழுத்திடும் என்ற அச்சம் தேவையில்லை

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கம் எம்.சி.சி. உடன்படிக்கையில் கையெழுத்திடும் என்று தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். வேறு நாடு ஒன்றின் இராணுவத் தளபதி குறித்து தீர்மானங்களை எடுக்க அமெரிக்காவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. நாட்டின் இராணுவத் தளபதி யார் என்பதை தீர்மானிப்பது நாட்டின் அரச தலைவர்.

அவர் அந்தப் பதவிக்குத் தகுதியானவரா? இல்லையா? என்பதை அரச தலைவரே தீர்மானிப்பார். வேறு நாடு எமது இராணுவத் தளபதி பற்றி தீர்மானிப்பதில்லை. இதனை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும்.

எமது இராணுவத் தளபதி மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதித்து எடுத்துள்ள தீர்மானம் இரண்டு நாடுகளின் நல்லுறவுக்குத் தடையை ஏற்படுத்தும்.

எம்.சி.சி. உடன்படிக்கை குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த அரசாங்கம் திருட்டுத்தனமாக இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது.

இதன் காரணமாக எம்.சி.சி. திட்டப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் குடும்பத்துடன் இலங்கையில் குடியேறியுள்ளனர். திருட்டுத்தனமாக உடன்படிக்கையில் கையெழுத்திட்டதே இதற்குக் காரணம்.

இதனால், உடனடியாக தீர்மானங்களை எடுக்காது. குழுவை நியமித்துள்ளோம். இந்தக் குழுவின் முடிவுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் மீண்டும் எம்.சி.சி. உடன்படிக்கையில் கையெழுத்திடும் என்று எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் விமல் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிஹான் பிலப்பிட்டியவை நீதிமன்றத்தின் உத்தரவின்றி கைது செய்ய முடியாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம்

(கொழும்பு)

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான். பிலப்பிட்டியவை நீதிமன்றத்தின் உத்தரவின்றி கைது செய்ய முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தான் கைது செய்யப்படுவதற்கு தடையுத்தரவு கோரி. கிஹான் பிலப்பிட்டிய நேற்று முன்தினம் வேட்பு மனு சமர்ப்பித்திருந்தார்.

குறித்த வேட்பு மனு. மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிமன்ற உத்தரவின்றி மனுதாரரை கைது செய்ய முடியாது என சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# முன்னாள் நீதிபதி உள்ளிட்ட இருவருக்கு 16 வருட கடூழியச் சிறைத் தண்டனை

(கொழும்பு)

முன்னாள் நீதிபதி உள்ளிட்ட இருவருக்கு 16 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹோமாகம மாவட்ட முன்னாள் நீதிபதி சுனில் அபேசிங்க மற்றும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகச் செயற்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே நேற்று வியாழக்கிழமை இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், இலஞ்சமாகப் பெற்ற 3 இலட்சம் ரூபாவை தண்டப்பணமாகச் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, பிரதிவாதிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்தத் தவறினால் மேலும் ,ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு வழக்கொன்றில் பிரதிவாதிக்கு சார்பாக தீர்ப்பை வழங்குவதற்காக 3 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களின் கீழ், இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது. (ஐ)

# அரசியல் நிகழ்ச்சி நிரலின்றி மத்திய வங்கி செயற்பட வேண்டும்

## ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் பேதமின்றி மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாகச் செயற்பட இடமளிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மத்திய வங்கிப் பணிகளை அனைவரும் சூழ்ச்சியாக கையாண்டதால் பொதுமக்களுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டது.

தடயவியல் கணக்கறிக்கையில் அடையாளங்காணப்பட்ட அனைவரும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள். அவர்கள் அரச பணத்தின் நிர்வாகத்தை சரிவர மேற்கொண்டிருக்க வேண்டும்.

மத்திய வங்கிக்கு பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேண பொறுப்புள்ளது. சமூக பாதுகாப்பு முறைமையையும் பேண வேண்டும். மத்திய வங்கியில் தற்பொழுதும் எதிர்காலத்திலும் நுட்பம் வாய்ந்தவர்கள் செயற்பட வேண்டும். குற்றச்சாட்டுக்கள் பரவலாக வந்துள்ளன. நிதி இழப்பீடுகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் இந்த மோசடிக்கு யார்? பொறுப்பு என அறிய வேண்டும். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுப் பொறுப்புடன் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். மத்திய வங்கியை பாதுகாக்க சகல உறுப்பினர்களும் தவறியுள்ளனர்.



தடயவியல் அறிக்கைச் சான்றுகளின் படி உரிய நடவடிக்கை எடுக்காவிடின் எதிர்காலத்தில் கூட இவை நடைபெறலாம். மத்திய வங்கி அரசியல் தலையீடின்றி சுயாதீனமாகச் செயற்பட வேண்டும். அரசியல் நிகழ்ச்சி நிரலின்றி அது செயற்பட வேண்டும்.

மேலும் குற்றத்தை மற்றவர் மீது சுமத்திக் கொண்டிருப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. அரசியல் பேதமின்றி மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாகச் செயற்பட இடமளிக்க வேண்டும். அத்துடன் வெளிப்படையாகவும் பொறுப்புக்கூறும் வகையிலும் மத்திய வங்கி செயற்பட வேண்டும்.

அரசியல் ரீதியில் தனிப்பட்ட நபர்கள் தலையீடு செய்வதைத் தடுக்க வேண்டும். இதற்காக பொறிமுறையொன்றை முன்வைத்து மத்திய வங்கியைப் பாதுகாக்க வேண்டும். எந்தவொரு கட்சிச் சார்பும் இன்றி சுயாதீனத் தன்மையுடன் செயற்படுவதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் துரைராசா வியாழாச்சி (துரையம்மா)



பிறப்பு-15.06.1940 இறப்பு-13.03.2018

எல்லாம் முடிந்து இரண்டு உருண்டது...
இன்னும் வாழ்கிறாய் நீ
எங்கள் எல்லோருக்குள்ளும்
மரணத்தின் வலியில்
நீ துடித்ததை விட எங்களை
இனி யார் காக்க என கலங்கியதே அதிகம்
என் குழந்தைகளையும் வளர்த்து
ஆளாக்கிட ஆசைப்பட்டாய்
அவசரப்பட்டு விட்டாயே.. அம்மா..!

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய். குடும்பத்தினர்.

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## வாழ்க்கையில் வெற்றிதரும் ஜென்ம நட்சத்திர குறியீடுகள்

அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய வடிவங்களை தினமும் பார்த்து வந்தாலோ அல்லது பயன்படுத்தி வந்தாலோ வாழ்க்கையில் எளிதில் வெற்றியடையலாம். ராமன் தன் ஜென்ம நட்சத்திர குறியீடான வில்லேந்தி ராவணனை வென்றான். கிருஷ்ணன் தன் ஜென்ம நட்சத்திர குறியீடான தேரை ஓட்டி பாண்டவர்களுக்கு வெற்றி தேடித் தந்தான்.

நட்சத்திர வடிவம்

அஸ்வினி- குதிரைத் தலை

பரணி- யோனி, அடுப்பு, முக்கோணம்

கிருத்திகை- கத்தி, கற்றை, வாள், தீஜ்வாலை

ரோஹினி- தேர், வண்டி, கோயில், ஆலமரம், ஊற்றால், சகடம்

மிருகசீரிடம்- மான் தலை, தேங்கைக்கண்

திருவாதிரை-மனிததலை, வைரம், கண்ணீர்த்துளி

புனர்பூசம்- வில்

பூசம்- புடலம்பூ, அம்புக்கூடு, பசுவின்மடி

ஆயில்யம்- சர்ப்பம், அம்மி

மகம்- வீடு, பல்லக்கு, நுகம்

பூரம்- கட்டில் கால், கண்கள், அத்திமரம், சதுரம், மெத்தை

உத்திரம்- கட்டில் கால், கம்பு, குச்சி, மெத்தை

ஹஸ்தம்-கை

சித்திரை-முத்து, புலிக்கண்

ஸ்வாதி-பவளம், தீபம்

விசாகம்-முறம், தோரணம், குயவன், சக்கரம்

அனுசம்- குடை, முடப்பனை, தாமரை, வில்வளைசல்

கேட்டை- குடை, குண்டலம், ஈட்டி

மூலம்- அங்குசம், சிங்கத்தின் வால், பொற்காளம், யானையின் துதிக்கை

பூராடம்- கட்டில் கால்

உத்திராடம்-கட்டில் கால்

திருவோணம்- முழக்கோல், மூன்று பாத்ச்சுவடு, அம்பு

அவிட்டம்- மிருதங்கம், உடுக்கை

சதயம்- பூங்கொத்து, மூலிகை கொத்து

பூரட்டாதி- கட்டில் கால்

உத்திரட்டாதி- கட்டில் கால்

ரேவதி- மீன், படகு.

# மக்கள் ஆணையின் பிரகாரமே ஐ.நா.தீர்மானங்களிலிருந்து விலகத் தீர்மானித்தோம்-சமரசிங்க

(கொழும்பு)

மக்கள் ஆணையின் பிரகாரமே ஐ.நாவின் தீர்மானங்களிலிருந்து விலகத் தீர்மானித்தோம் என இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



'ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த ஆணையின் பிரகாரமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்னைய அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இரண்டு பிரேரணைகளிலிருந்தும் விலகுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்னைய அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களிலிருந்து விலகுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல.

மாறாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சமான எதிர்காலம் என்ற தொனிப்பொருளிலான தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த விடயம் ஏற்கனவே கூறப்பட்டிருக்கின்றது.

அதற்கமையவே இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தெய்வீக ஆடல் அர்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் நாட்டிய கலாக்ஷேத்திரா ஆடற்கலையகம், பிரபல நாட்டிய நிறுவனங்களுடன் இணைந்து வழங்கும் ''தெய்வீக ஆடல் அர்ப்பணம்'' இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணி முதல் இரவு 11.30 மணிவரை கைதடி சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் கலந்து கொள்வார். (இ-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை, வேம்படிப் பிள்ளையார் கோவில் (வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவில்) வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-5)

## சிவராத்திரியும் தீர்த்தோற்சவமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி விரத உற்சவம் இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இதில் மாலை 4.30 மணி தொடக்கம் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மறுநாள் அதிகாலை 4 மணியளவில் திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ-5)

## கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திற்கு கடல், தரை போக்குவரத்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்துச் சேவையானது 6 ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் வரை இடம்பெறவுள்ளது.

கடற்போக்குவரத்து அதிகாலை 6 மணி முதல் நண்பகல் 12 மணிவரை குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு இடம்பெறவுள்ளது.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு ஒரு வழிக்கட்டணமாக 325 ரூபாயும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கு ஒரு வழிக்கட்டணமாக 250 ரூபாயும் அறவிடப்படும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (இ)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்கிழக்குப்பிரதேசசெயலகப்பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான உதவியை வழங்குவதற்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார திட்டத்தின் ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கையை பண்பாட்டுப்பேரவை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தரமதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர். அதற்குத் தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் கிழக்குப்பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார்.(இ)

## சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் மகாசிவராத்திரிவழிபாடுகள் இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இதில் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பஜனைகளும் இடம்பெறும். (இ-5)

## இராசி பலன்

**மீனம்**



குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மேடம்**



வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்**



மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்**



மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்**



சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சுபகாரியச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை | | |
| சனி, கேது, குரு, செவ் | | | |

**21.02.2020**

மாசி 09, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 6.45 மணிவரை

உத்தராடம் முற்பகல் 10.44 மணிவரை

சுபநேரம் 6.31-8.01 மணிவரை

இராகுகாலம் 11.01-12.31 மணிவரை

மகா சிவராத்திரி, பிரதோச விரதம்

குறைவானதற்குத் திருப்தியடைவதே நிறைவான செல்வம்

வளவன்

**கடகம்**



ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்**



வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பெரியோர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்**



இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**



நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்**



பாராட்டும் புகழும் கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**



நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், பெற்றோர் மீதான பிரியம் கூடும், ஆலய வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**



ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

# பழைய முறைமையில் மாகாண சபைத்தேர்தல்

## நிமால் சிறிபால டி சில்வா தகவல்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் நிறை வடைந்தவுடன் பழைய முறைமையில் மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கான சட்ட திட் டங்கள் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளன என நீதி மன்றங்கள், மனித உரி மைகள் மற்றும் சட்ட மறு சீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் தார்.

மாகாண சபைத் தேர் தல்கள் இழுத்தடிக்கப்படு வது குறித்து விமர்சனங் கள் முன்வைக்கப்படும் நிலையில், தற்போது இருக் கும் சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்து வதற்கு அரசாங்கம் தீர்மா னித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தமதுஅமைச்சுடன்இணை ந்து உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தேர்தலை நடத்து வதற்குத் தேவையான சட் டங்களை உருவாக்கி வரு வதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங் கேணி வத்திராயன் கிராம அலுவலகத் திற்கு அருகா மையில் 10 ஏக்கர் காணி விற்ப னைக்கு உண்டு.

**தொடர்பு:—0755935814**

(C-819)



# பாராட்டி வாழ்த்துகிறோம்

சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட

**திரு.மேரிஜோசப் சாந்தசீலன்**

அவர்கள்



*நிர்வாகம், திட்டமிடலில் திறமைமிகு பணியாற்றி*
*உயர்ந்த செம்மல் – இன்று*
*சட்டமதை சரிவர பூர்த்திசெய்து*
*நிறைவு காணும் – சீலன்*
*தொட்ட உயரங்கள் தொடத்*
*துடிப்போர்க்கும் பாடமாகும் – அவர்*
*விட்டதென்று எதுவுமின்றி இன்னும்*
*இனியும் உயர வாழ்த்துகின்றோம்.*

என்றும் அன்புடன்
நண்பர்கள்: த.மூர்த்தி,
சி.அனுஷியா, கி.அனிதா.



உ
சிவமயம்

**உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்**
**உசன் - மிருசுவில்**

# 108 கலசாபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா

**23.02.2020 ஞாயிற்றுக்கிழமை**

**"அருள்வாக்குச் சித்தர்"**
**குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்**
(பிரதமகுரு, உசன் கந்தசுவாமி கோவில்)
தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்

ஹோம பூஜையில் இணைந்து கொள்ள விரும்பும் அடியார்கள் பிரதமகுரு, தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**பிரதமகுரு தொ.பே.எண்:- 077 723 8561**

*MR.R.KETHEESWARA SARMA*
*COMMERCIAL BANK - JAFFNA*
*A.C.NO : 8600921092*

**அன்றைய தினம் இல.769, வழித்திட இ.போ.ச. வண்டி மற்றும் தனியார் . சிற்றூர்தி வண்டி யாழ்ப்பாணம் - உசன் - யாழ்ப்பாணம் இடம்பெறும்.**

குறிப்பு: அடியார்கள் சைவசமய பண்பாட்டு உடை அணிந்து வருவதோடு பெண்கள் கேசத்தைப் பின்னலிட்டு வருகை தருவது உத்தமம்.
அபிஷேக, ஹோமபூஜை அன்னதானத்திற்குரிய பொருட்களை உபகரிக்கலாம்.
மாற்று வலுவுள்ளோருக்கான உதவியும் ஆலயத்தில் வைத்து வழங்கப்படும்.

**நிகழ்வுகளை WWW.Facebook.com / usankanthan.com இல் பார்வையிடலாம்**

**சேவற்கொடியோன் சேவடி போற்றி!**
**சீர் உசன் பதிக்குமரன் சீரடி போற்றி!**
மங்களம்.

இங்ஙனம்
உசன், மிருசுவில். ஆலய தர்மகர்த்தா.

**விளம்பர அனுசரணை:-**
**வீ.எம்.கே.ஜுவலறி, கண்டி வீதி, சாவகச்சேரி**
**கிளை - நியூ வீ.எம்.கே. ஜுவலறி, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 13 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: B.Sc Quantity Surveying,<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/10520 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 9 செவ் 11 ல்<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/10540 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 19 1/4 செவ் 3 இல்<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்: Management service officer<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10523 | பிறப்பு: 1995 கிறிஸ்தவம்<br>செவ் 10 ல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி,<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/ 10548 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி கி.பா: 37 ½<br>செவ் 7 ல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.A(HONS), அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10524 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 89 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தொழில் புரியும் மணமகன்<br>தொ.இ: G/ 10549 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2 கி.பா:29<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: M.Sc . Senior software Engineer,<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10526 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 11 1/2 செவ் 5 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/ 10551 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



உ
ஸ்ரீ ராம ஜெயம்

**இணுவில் திருப்பதி**
**அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய**

# இலட்சார்ச்சனை விழா-2020

**13.02.2020-22.02.2020 வரை**

(2240)

கோவிந்தன் அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோவில் கொண் டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் விகாரி வருடம் தைத்திங்கள் 29 ஆம் நாள் (13. 02.2020) தொடக்கம் மாசித்திங்கள் 10ஆம் நாள் (22.02.2020) வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தி யான எம்பெருமானுக்கு 10 அந்தண ஆச்சரியர்கள் ஒன்று கூடி எம் பெருமானுக்கு இக்கைங்கரியம் நடைபெறவுள்ளதால் அடியார்கள் யாவரும் இவ்வாலயத்திற்கு வந்து. இந்த அர்ச்சனையிலும். தினமும் நடைபெறும் மகா யாகத்திலும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள் கிறோம். தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும். 22.02.2020 சனிக்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தி. காலை 7.00 மணி முதல் பகவத்கீதா ஹோமம் ஆரம்பமாகி தொடர்ந்து தாராஹோமம், பூர்ணாகுதி சர்வ உபசார பூஜை நடைபெற்று கும்ப வீதியுலா, கும்ப புரோட்சணம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.


09ஆம் நாள் (21.02.2020) விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம்-சர்வ சித்தி 10ஆம் நாள் (22.02.2020) **பகவத் கீதா ஹோமம்- சர்வசித்தி பெறல், தாரா ஹோமம், மகாபூர்ணாகுதி, பகல் 11.30 மணிக்கு கும்ப வீதியுலா, சுவாமி வீதியுலா, கும்ப புரோட்சணம், பெரிய பெருமாள் அருள்தரிசனம் தொடர்ந்து அன்னதானம்.**

**மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஹோமங்கள் இக்காலத்தில் நடைபெறவிருப்பதால் அடியவர்கள் தங்களுக்கான பரிஹார ஹோமத்தை தேர்வு செய்து முற்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

முக்கிய குறிப்பு: விஷேட ஹோமங்கள் இக்காலத்தில் நடைபெறவி ருப்பதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோம திரவியங்களை ஆலயத்திற்கு சமர்ப்பிக்க முடியும். தொடர்புக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல.:** **ஆலய தர்மகர்த்தா**
**021 224 2300,077 725 2476** *(2240)* **ச.கணேசலிங்கம்**

# பிரகீத் எக்னெலிகொடவை காணாமலாக்கிய சம்பவம் சாட்சி விசாரணைகள் மார்ச் 11 ஆம் திகதி ஆரம்பம்



## மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை காணாமலாக்கிய சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சி விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்க கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை சம்பத் அபயகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் கிஹான் குலதுங்க ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த வழக்கின் சாட்சி விசாரணைகளை மார்ச் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானித்த நீதிபதிகள் குழாம், சாட்சியாளர்களை அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவுறுத்தினர்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக கிரித்தலை இராணுவ முகாமின் கட்டளை அதிகாரி லூதினன் கர்ணல் ஷம்மி குமாரரத்ன. டபிள்யூ.டீ.உபசேன (சுரேஷ்), ஆர்.எம்.பீ.கே.ராஜபக்ஷ (நாதன்), எஸ்.எம்.ரவிந்திர ரூபசிங்க (ரஞ்சி), சமிந்த குமார அபேரத்ன கனிஷ்க குணரத்ன, ஜயாசாமி பாலசுப்பிரமணியம், தரங்க பிரசாத் கமகே மற்றும் டீ.ஈ.ஆர்.பீரிஸ் ஆகிய இராணுவப் புலனாய்வுப் பிரிவின் 9 உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் கிரிதலை, ஹபரணை மற்றும் கொட்டாவை ஆகிய பிரதேசங்களில் பிரதிவாதிகள் மேலும் சில பெயர் தெரியாத நபர்களுடன் இணைந்து இரகசியமான முறையில் "சிறைப்படுத்தும் நோக்கில்" ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தியமை மற்றும் கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. (இ-7)

## பெரும்பான்மை இல்லை

# குறை நிரப்புப் பிரேரணையை திரும்பப்பெற்றது அரசாங்கம்

(கொழும்பு)

**அரசாங்கம் கடனைப் பெற்றுக்கொள்ளும் வரையறையை நீடிப்பதற்காக நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யத் தயாராக இருந்த குறை நிரப்புப் பிரேரணையை திரும்பப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தது.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு எதிர்க்கட்சி வாக்கெடுப்பை கோரியதே இதற்குக் காரணம். நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை பலம் இல்லை.

எதிர்க்கட்சி பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ளது. அரசாங்கம் கடனைப் பெறும் வரையறையான 721 பில்லியன் ரூபாயில் இருந்து 1078 பில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் இந்தக் குறை நிரப்புப் பிரேரணையைக் கொண்டுவர ஆளும் கட்சி தீர்மானித்தது.

ஏற்பட்டுள்ள இந்த நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவசரமாக கட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





**சர்வதேச தொழிலாளர் அமைப்பால் மீனவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக 2007 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட பிரகடனம் தொடர்பாக விழிப்பூட்டல் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினரால் நடத்தப்பட்டது. இதில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

# முகக் கவசங்களுடன் இருப்போர் அதனை அகற்றாவிடில் கைதுசெய்ய பொலிஸாருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்

## துறைசார் மேற்பார்வை குழு எச்சரிக்கை

(கொழும்பு)

பர்தா , நிகாப் போன்ற ஆடைகளை குறிப்பிட்டு தடை செய்வது ஓரினத்தை சுட்டிக்காட்டுவதாக இருப்பதனால் அப்பெயர்களை குறிப்பிடுவதற்கு பதிலாக ஒருவரது முகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத மற்றும் சிரமமான முக மறைப்புக்கள் தலைக் கவசங்களை தடை செய்ய வேண்டுமென தேசிய பாதுகாப்பு பற்றி துறைசார் மேற்பார்வை குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் இவ்வாறான முக மூடிகளுடன் இருப்போர் அதனை அகற்றாத பட்சத்தில் அவர்களை பிடியாணையின்றி கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று தேசிய பாதுகாப்பு பற்றி பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தவிசாளர் மலிக் ஜயதிலக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம் பெண்களின் ஆடை அணிதல் தொடர்பான பிரச்சினை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் இலங்கை சமூகத்தில் முக்கிய பிரச்சினையாக காணப்பட்டது.

இந்த ஆடைகளில் பர்தாவும் அபாயாவுமே பிரச்சினைக்குரியதாக காணப்படுகின்றன. கண்ணியத்துடன் நடந்துகொள்ளும் முஸ்லிம் பெண்கள் தனது கணவரை தவிர்ந்த வேறு ஆண்களுக்கு தமது முகத்தை காட்ட விரும்பாமை காரணமாகவே இந்த ஆடைகளை அணிவதாக அவர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டாலும் இந்த புது மாதிரியான அரேபிய ஆடைகளுக்கு பெரும்பான்மை சமூகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த ஆடைகள் தொடர்பில் வெளிநாடுகள் பலவும் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட நாடுகள் பலவும் தடை விதித்துள்ளமையும் எம்மால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி ஜனாதிபதியின் அவசர சட்ட ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட 2121/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பர்தா , நிகாப் தடை செய்யப்பட்டது.

அத்துடன் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரால் இவ்விடயம் தொடர்பில் பொது இடங்களில் முகத்தை மறைத்தலை தடை செய்தல் என்ற தலைப்பில் 2019.07.17 அன்று அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பினால் அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் உருவான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைப்பது தொடர்பில் ஆரம்பத்தில் இருந்து தீவிர கவனம் செலுத்தியது.

இந்த ஆடைகளுக்கு ஜனாதிபதியால் தடை விதிக்கப்பட்ட போதும் அதனை நாட்டின் பொதுவான சட்டத்தின் கீழ் தடை செய்வதற் குரிய சட்டம் வகுக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கமைய இத்தகைய முக மறைப்புகள் அணியப்படுவதை குற்றவியல் சட்டக் கோவைக்கு அமைய ஒரு குற்றமாக அறிவிப்பதற்கு ஏற்புடையதாக எடுக்க வேண்டி சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எமது குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய பர்தா, நிகாப் போன்ற பெயர்களை குறிப்பிடுவதற்கு பதிலாக ஒருவரது முகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத மற்றும் சிரமமான முக மறைப்புகள், தலைக் கவசங்களை தடை செய்தல் என குறிப்பிடுதல் பொருத்தமானதென்ற கருத்து எமது குழுவில் முன்வைக்கப்பட்டது. பர்தா , நிகாப் என்று குறிப்பிடுவது ஓர் இனத்தை சுட்டிக்காட்டுவதாக அமைந்துவிடலாம் என்பதாலேயே இம்முடிவு எட்டப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அருகிவரும் இந்துக்களின் சம்பிரதாயங்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் அற்புதமான விஞ்ஞான காரணங்கள்

இந்து மதம் என்பது ஒரு புதிரான மதமாகும். எண்ணிலடங்கா சடங்குகள், மரபுகள் மற்றும் சம்பிரதாயங்கள் இந்த நம்பிக்கையின் பின்புலமாக அமைகிறது. இவ்வகையான சடங்குகளின் அவசியம் என்ன என நம்மில் பலருக்கு கேள்வி கேட்க தோன்றும். இன்றைய நவீன உலகத்தில் அது எப்படி பொருத்தமாக அமையும் என்றும் தோன்றும். நம்மில் பலர் பெரும்பாலான சடங்குகளை மூட நம்பிக்கை எனக் கூறி ஒதுக்கி வைத்து விடுகிறோம். ஆனால் அவைகள் எல்லாம் பழங்காலத்தில் இரு ந்து பின்பற்றப்பட்டு வருபவைகளாகும். ஆகவே, அனைத்து இந்து சடங்குகளும் மூட நம்பிக்கைகளா? இதற்கான விடை உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும். இந்து மதத்தின் கடைசி சடங்குகளில் பெண்கள் ஏன் ஈடுபடுவதில்லை?

பொதுவாகவே மூடநம்பிக்கைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் வளர்த்து வருவதாக குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களுக்கும் ஆளாகியிருக்கிறது இந்து மதம் ஆனால் உண்மை மிகவும் அப்பாற்பட்டது. இந்து மதம் என்பது உலகத்தில் உள்ள விஞ்ஞான வடிவிலான மதங்களில் ஒன்றாகும். அதன் வழக்கங்களும் மரபுகளும் காரண காரியத் தொடர்புடைய விஞ்ஞான காரணங்களை அதன்பின் வைத்திருக்கும். ஒவ்வொரு சடங்குகளும் நாம் நலமுடன் இருப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் அது தனிப்பட்டவரின் செயல் மேம்பாட்டுக்கும் உதவும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் ஏன் தலையை மொட்டை அடிக்கிறார்கள் என்பது தெரியுமா? பழங்கால மரபுகளுக்கு பின்னால் உள்ள அற்புதமான விஞ்ஞான காரணங்கள் பற்றி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒவ்வொரு சடங்குகளுக்கு பின்னால் இருக்கும் காரணங்களை தெரிந்து கொள்வதில் அவ்வளவு சுவாரசியம் உண்டாகும். வாங்க பார்க்கலாம்.

### 1. நமஸ்காரம்



நமஸ்காரம் செய்வது இந்துக்களின் உன்னதமான சைகையாகும். பொதுவாக இதை மரியாதை அளிக்கும் சைகையாக பார்க்கிறனர். ஆனால், நமஸ்காரம் செய்யும் போது, இரண்டு கைகளையும் ஒன்று சேர்க்கும் போது, உங்களின் விரல் நுனிகள் அனைத்தும் ஒன்று சேரும். அவைகள் ஒன்றாக அழுத்தும் போது ப்ரெஷர் புள்ளிகள் செயற் பட தொடங்கும். இதனால் அந்த நபரை நீண்ட நாட்களுக்கு மறக்காமல் இருக்கச் செய்யும்.

### 2. மெட்டி




திருமணமான இந்து பெண்கள் மெட்டி அணிவது வாடிக்கையான ஒன்றே. அது வெறும் அலங்காரத்திற்கு மட்டுமல்ல. பொதுவாக பெருவிரலுக்கு அடுத்த விரலில் தான் பெண்கள் மெட்டி அணிவார்கள். இந்த விரலில் இருந்து செல்லும் நரம்பு கர்ப்பப்பை மற்றும் இதயத்திற்கு நேரடியாகச் செல்கிறது. இரண்டாம் விரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பை வலுவடைந்து, மாதவிடாய் இரத்த ஓட்டத்தை சீராக்கவும் உதவும்.

### 3. பொட்டு



ஒவ்வொரு பெண்ணும் நெற்றியில் குங்குமம் அணிவது வாடிக்கையான ஒன்றே. நெற்றியில் தான் ஆட்ன்யா சக்கரம் இருப்பதாக கூறப்படுகிறது. அதனால் நெற்றியில் பொட்டு வைக்கும் போது இந்த சக்கரம் தானாக செயற்பட தொடங்கி விடும். இது உடலில் உள்ள ஆற்றல் திறனை இழக்க விடாமல் செய்யும். மேலும் புத்தி ஒரு முனைப்படுதலை மேம்படுத்தும்.

### 4. கோவில் மணிகள்



கோவில் மணிகள் சாதாரண உலோகத்தில் செய்யப்படுவதில்லை. காட்மியம், சின்க், லெட், கொப்பர், நிக்கல், குரோமியம் மற்றும் மங்கனீஸ் போன்ற பல உலோகங்களை கொண்டு செய்யப்படுபவை. கோவில் மணியை செய்ய ஒவ்வொரு உலோகத்தையும் சரியான அளவில் கலக்க வேண்டும். அதன் பின்னணியில் இருக்கும் விஞ்ஞானம், மணியை ஒலிக்க செய்யும் போது ஒவ்வொரு உலோகமும் ஒவ்வொரு தனித்துவமான ஒலியாய் எழுப்பும். இது உங்கள் இடது மற்றும் வலது மூளையை இணைக்க செய்யும். அதனால் மணி அடித்த அடுத்த தருணமே, நீண்ட நேரம் ஒலிக்கும் கூர்மையான சத்தம் எழும். இது 7 நொடிகள் வரை நீடிக்கும். மணியில் இருந்து எழும் எதிரொலி உங்கள் உடலில் உள்ள 7 குணமாதல் மையங்களையும் (சக்கரங்கள்) தொடும். அதனால் மணி ஒலித்த உடனேயே, உங்கள் மூளை சில விநாடிகளுக்கு வெறுமையாகி விடும். அப்போது மெய்மறதி நிலையை அடைவீர்கள். இந்த மெய்மறதி நிலையில், உங்கள் மூளை சொல்வதை வரவேற்கும் பண்பை பெறும்.

### 5. துளசியை வழிபடுதல்



முன்னைய காலத்தில் முக்கால் வாசி இந்துக்களின் வீடுகளில் துளசி செடியுடன் கூடிய துளசி மாடம் இருக்கும். அதனை தினசரி வழிபடுவார்கள். அதற்கு காரணம் துளசியில் உள்ள உயர்ந்த மருத்துவ குணங்கள். துளசி செடியின் மகத்துவத்தை புரிந்து கொண்ட பழங்கால முனிவர்கள், அது அழிந்து விடாமல் காப்பதற்காக, அதனை வழிபடும் சடங்கை உண்டாக்கினார்கள். அப்படி செய்வதால் அச்செடியை மதித்து அதனை பத்திரமாக பாதுகாத்திடுவர்.

### 6. அரசமரம்



பொதுவாக அரசமரத்தை பயனற்ற மரமாக பார்க்கின்றனர். அதனால் எந்த ஒரு கனியோ அல்லது திடமான மரமோ கிடைப்பதில்லை. இருந்தும் கூட அதனை பல இந்துக்கள் வழிபடுகின்றனர். ஆனால், இரவு நேரத்தில் ஒட்சிசன் உண்டாக்கும் சில மரங்களில் அரசமரமும் ஒன்று. என்ன சுவாரசியமாக உள்ளதா? அதனால், இந்த மரத்தை பாதுகாப்பாக வைத்திடவே அதை புனித மரமாக கருதுகின்றனர்.

### 8. ஆபரணங்கள்


இந்து பெண்களுக்கு ஆபரணங்கள் என்றால் கொள்ளை பிரியம். இந்திய பெண்கள் கட்டாயம் தினமும் தங்கம், வெள்ளி போன்றவற்றாலான காதணி, வளையல், கொலுசு, மோதிரம், செயின் போன்றவற்றை அணிந்திருப்பார்கள்.

அதிலும் அவர்கள் அணியும் வெள்ளிக் கொலுசு உடலின் மற்ற கனிமங்களை சீராக




பராமரிக்கவும், இரத்த நாளங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், எலும்புகளின் உருவாக்கத்திற்கும் உதவுகிறது.

### 9. காது குத்துவது



குழந்தையாக இருக்கும் போதே, ஆண், பெண் என இருபாலாருக்கும் காது குத்தும் பழக்கம் இந்துக்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களில் ஒன்று. உண்மையில் காது குத்திக் கொள்வதால், மனதில் அமைதி உருவாகிறது. காது குத்துவதற்கும், ஆரோக்கியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டால், ஆண் குழந்தைகளுக்கு காது குத்துவதால், குடலிறக்கம் ஏற்படுவது தடுக்கப்படும். மற்றும் பெண் குழந்தைகளுக்கு குத்துவதால், மாதவிடாய் சுழற்சி சீராக இருக்கும்.

### 10. கோலம் போடுவது



விழாக் காலங்கள் மட்டுமன்றி, தினமும் பெண்கள் காலையில் வாசலில் நீர் தெளித்து கோலம் போடுவதால், வீடு மங்களகரமாக காண்பதோடு, மனநிலை மேம்படுமாம்.

அதிலும் ரங்கோலி போட்டு, அதற்கு நிறங்களைக் கொடுக்கும் போது, அந் நிறங்களானது கண்களுக்கு குளிர்ச்சியைத் தந்து, கண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துமாம்.

(தொடரும்...)

**காலிங்கராசா ஹரிச்சந்திரா**
தொழில்நுட்பஅலுவலர்,
மீன்பிடி யியல் விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம், யாழ்.
பல்கலைக்கழகம்

**புதிர் 237 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

நடராசா கண்ணதாஸ்
6ம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

**புதிர் 237 க்கான கேள்வியும் விடையும்:**


ஏற்றங்களை சேமிப்பதற்கான ஒரு சாதனமே கொள்ளளவியாகும். கொள்ளளவியின் கொள்ளளவம் அளக்கப்படும் அலகு யாது?

பரட் - Farad (F)

# போராட்டத்தை ஆரம்பித்து 3 ஆண்டுகள் நிறைவு; காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்









(முறிகண்டி)

தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 3 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் நேற்று கிளிநொச்சி வலி ந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஜ-100-316)

## மக்கள் பாவனைக்காக பாலம் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இத்திமடு வீதியில் ஆயிரம் கிராம பாலங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாலம் நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது. ஒட்டுசுட்டான் நகரிலிருந்து பெரிய இத்திமடு, தண்டுவான், பழம்பாசி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1700 குடும்பங்கள் பயன்படுத்துகின்ற குறித்த வீதியில் பாலம் இல்லாமையால் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வந்த நிலையில் அரசாங்கத்தினுடைய ஆயிரம் கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் குறித்த பாலம் நிர்மாணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-281)




## 122 இலட்சம் நிதி முழங்காவிலின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கிளிநொச்சியின் ஊர் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முழங்காவில் பிரதேசத்தில் 4 வீதிகளின் புனரமைப்புக்கென 80 இலட்சம் (8 மில்லியன்) ரூபாவும், 6 ஆலய புனரமைப்புக்கென 20 இலட்சம் (2 மில்லியன்) ரூபாவும், 6 விளையாட்டு மைதான புனரமைப்புக்கென 21.9 இலட்சம், முழங்காவில் மகா வித்தியாலய சித்திர பொருட்கள் கொள்வனவிற்கு 40 ஆயிரம் ரூபாவுமாக மொத்தமாக 17 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 122 இலட்சம் (12.2 மில்லியன்) ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

**நிதி ஒதுக்கப்பட்ட வீதிகள்...**

1) முழங்காவில் குருபரன் வீதி (20 இலட்சம்)

2) இளநிலா குடியிருப்பு - முழங்காவில் இணைப்பு வீதி (20 இலட்சம்)

3) முழங்காவில் மாதா சொரூப வீதி (20 இலட்சம்)

4) இளநிலா குடியிருப்பு வீதி (20 இலட்சம்)

**நிதி ஒதுக்கப்பட்ட பாடசாலை...**

1) கிளி/முழங்காவில் மகா வித்தியாலய சித்திர பொருள் கொள்வனவு - 40,000

2) முழங்காவில் ஆரம்ப பாடசாலை மைதான புனரமைப்பு - 5 இலட்சம்

**நிதி ஒதுக்கப்பட்ட ஆலயங்கள்...**

1) முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் ஆலயம் (5 இலட்சம்)

2) முழங்காவில் ஸ்ரீமுருகன் ஆலயம் (3 இலட்சம்)

3) அன்புபுரம் நாகபூஷணி அம்மன் ஆலயம் (2 இலட்சம்)

4) சிறீதேவி பூமிதேவி சமேத வரதராஜ வெங்கடேஸ்வரர் ஆலயம் (3 இலட்சம்)

5) முழங்காவில் மாதா தேவாலயம் (5 இலட்சம்)

6) முழங்காவில் செபஸ்தியார் தேவாலயம் (2 இலட்சம்)

**நிதி ஒதுக்கப்பட்ட மைதானங்கள்...**

1) விநாயகர் விளையாட்டுக் கழக மைதானம் (ஊர் எழுச்சி 2018) - 90 ஆயிரம்

2) விநாயகர் விளையாட்டுக் கழக மைதானம் (ஊர் எழுச்சி 2019) - 5 இலட்சம்

3) அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானம் (3 இலட்சம்)

4) புனித செபஸ்தியார் விளையாட்டுக்கழக மைதானம் (3 இலட்சம்)

5) விநாயகர் விளையாட்டுக் கழக மைதானம் (விசேட நிதி மூலம்) (3 இலட்சம்)

இவ்வாறு 17 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 122 இலட்சம் (12.2 மில்லியன்) ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பல வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. சில வேலைத்திட்டங்கள் தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஜ-2)

# வவுனியாவில் சைவத்திருக்கோவில் அறங்காவலர் மாநாடு






(நெளுக்குளம்)

சர்வதேச இந்து கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சைவத்திருக்கோவில் அறங்காவலர் கருத்தரங்கு மாநாடு வவுனியாவில் இடம்பெற்றது. சைவத்திருக்கோவில்களின் சமூகப்பணிகள் எனும் தலைப்பில் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த சைவத்திருக்கோவில்களின் அறங்காவலர்களுக்கான கருத்தரங்கு நேற்றுக்காலை 9 மணியளவில் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள ஓவியா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது தற்போதைய சூழலில் சைவ சமயம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றை கையாள்வதற்கு திருக்கோயில்களின் அறங்காவலர்கள் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் இந்தியா, கனடா மற்றும் மலேசியா, நோர்வே போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களால் கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. (ஜ-2-299)

## மன்.மாவட்டத்திற்கு 'தீயணைப்புப் பிரிவு' வேண்டும்

## மன்.அரச அதிபருக்கு மகஜர் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு என "தீயணைப்பு பிரிவு" ஒன்றை உடனடியாக ஏற்படுத்தக் கோரி மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பு மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்து மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்ராஸிடம் நேற்று முன்தினம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பின் பொறுப்பதிகாரி ரி.மேரி பிரியங்கா தலைமையில் சென்ற குழுவினர் குறித்த மகஜரை மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ. மோகன்ராஸிடம் கையளித்தனர்.

குறித்த மகஜரில் மன்னார் மாவட்டத்திற்கு என இதுவரை தீயணைப்புப் பிரிவு இல்லாத நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் வீடுகள் மற்றும் பொது இடங்கள் தீப்பற்றி எரிந்த பல சம்பவங்கள் உண்டு. எனவே குறித்த சம்பவங்களை கருத்தில் கொண்டு மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பினால் மன்னார் மற்றும் முசலி பிரதேசத் திற்குட்பட்ட பல கிராமங்கள் இணைந்து இப்பிரச்சினையை தீர்க்கக் கோரியுள்ளனர்.

எனவே இப்பிரச்சினையை எமது அமைப்பு சார்பாக தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

எனவே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட மாவட்ட அரச அதிபர், குறித்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ்வருடத்திற்குள் மன்னார் மாவட்டத்திற்கு என "தீயணைப்புப் பிரிவு" ஒன்றை உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்திருந்தார். (9-285)




## தேர்ச்சிக் கூடம் திறப்பு





(நெளுக்குளம்)

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய பாடசாலையில் தேர்ச்சி கூடத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டதுடன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியிலும் கலந்து கொண்டிருந்தார்.

பாடசாலையின் அதிபர் ச.சுபாஸ்கரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

## இராணுவத்தினரால் ஆலயங்களில் மரநடுகை திட்டம் முன்னெடுப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள ஆலயங்களில் இராணுவத்தினரால் மரநடுகை முன்னெடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிலும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆலயங்களில் இராணுவத்தினரால் மரநடுகை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இராணுவத்தினரின் 65 ஆவது படைப்பிரிவு, 652 ஆவது படைப் பிரிவு என்பன மரநடுகையில் ஈடுபட்டுள்ளன. இதுவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 30 இற்கு மேற்பட்ட ஆலயங்களில் மரநடுகை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (9-350)

## பூநகரி முக்கொம்பன் சந்தையில் மரக்கறி விற்பனை வீழ்ச்சி

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியின் முக்கொம்பன் பொதுச் சந்தைக்கு வெளியில் மரக்கறிகள் விற்கப்படுவதன் காரணமாக சந்தையில் மரக்கறி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



பூநகரி பிரதேச சபையினால் சந்தை வியாபாரிகளிடம் இருந்து வரிகள் அறவிடப்படுகின்ற போதிலும் நாள்தோறும் சந்தையினை கண்காணிப்பதற்கான எந்த ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வாரத்தில் ஒரு நாள் மட்டும் பணியாளர் வந்து ஒட்டுமொத்தமான வரியினைப் பெற்றுச் செல்வதாகவும் சந்தையின் பராமரிப்புகள் இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தையில் மரக்கறி விற்பனையில் பெண்ணொருவர் மட்டும் ஈடுபட்டுள்ள நிலையில் சந்தைக்கு அருகில் உள்ள கடைகளில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதன் காரணமாக சந்தையில் மரக்கறி விற்பனை பாதிக்கப்படுவதாகவும் சந்தை ஆரம்பிக்கப்படும் போது அருகில் உள்ள கடைகளில் மரக்கறி விற்பனை செய்வதைத் தடை செய்வதாகவும் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக சந்தையில் மரக்கறி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முக்கொம்பன் சந்தையில் மீன்களின் விலை அதிகமாகக் காணப்படுவதாகவும் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சந்தைக்கு வருகை தராததன் காரணமாக இந்நிலை காணப்படுவதாகவும் முக்கொம்பன் சந்தை பிரதேச சபையின் கண்காணிப்பின்றி தனியார் வர்த்தக நிலையம் போன்று இயங்குவதாகவும் பொதுமக்களினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (9-350)

## கலை அரங்கு, திறன் வகுப்பறை விளையாட்டு முற்றம் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - முள்ளியவளை, தமிழ் வித்தியாலயத்தில் கலை அரங்கு, திறன் வகுப்பறை மற்றும் சிறார்களுக்கான விளையாட்டு முற்றம் என்பன நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறீஸ்கந்தராசாவின் ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கலை அரங்கானது உறுப்பினரால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையானது உறுப்பினரால் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நான்கு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறார்களுக்கான விளையாட்டு முற்றமானது அமைக்கப்பட்டிருந்தது.

இதனை கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் கமலநாதன் விஜிந்தன் திறந்து வைத்தார். (9-281)

## ஆங்கில தினமும் பரிசளிப்பு விழாவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தினுடைய 2019 ஆம் ஆண்டுக்குரிய வலய மட்ட ஆங்கில தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொள்வார். (ஜ-2)

## அஞ்சல் அலுவலக கட்டடம் அமைக்க நிதி உதவி



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட இயக்கச்சி பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலக கட்டடம் அமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் 2 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இறுதிப்போரில் மிகவும் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளியின் இயக்கச்சி பிரதேசத்தில் 30 வருடங்களாக உப அஞ்சல் அலுவலகத்திற்கு ஒரு நிலையான கட்டடம் மற்றும் காணி அற்ற நிலையில் பிரதேசத்தின் சமூக ஆர்வலர் ஒருவரால் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது.

ஆனாலும் கட்டடம் அமைப்பதற்கான நிதி மூலம் நீண்டகாலமாக அடையாளப்படுத்தப்பட முடியாத நிலை காணப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக வட்டாரத்தினர் பிரதேச சபை உறுப்பினர் ரமேஷ் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினரால் குறித்த கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து கட்டுமானப் பணிகளும் தற்போது நிறைவு பெற்றுள்ளது. (9-315-350)

# பாரதம்

# உயிரைக்குடிக்கும் கொரோனா! உயிரிழப்பு 2128 ஆக அதிகரிப்பு

(பீஜிங்)

**கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 128 ஆக அதிகரித்துள்ளதுடன் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்து 727 ஆக அதிகரித்துள்ளது.**



அத்துடன் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 16 ஆயிரத்து 433 பேர் குணமடைந்துள்ளதுடன், 12 ஆயிரத்து 63 பேர் ஆபத்தான நிலையிலும் உள்ளனர்.

இதேவேளை தென்கொரியாவில் தற்போது கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது 82 ஆக உயர்வடைந்துள்ளது.

ஒரே இரவில் மாத்திரம் 31 பேர் புதிதாக இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை ஈரானின் டெஹ்ரானுக்கு தெற்கே உள்ள கோம் நகரில் கொரோனா வைரஸ் காரணமாக இரண்டு முதியவர்கள் உயிரிழந்துள்ளதாக ஈரானின் சுகாதார அமைச்சரின் ஆலோசகரான அலிரெஸா வஹாப்சாதே உறுதிப்படுத்தியுள்ளார். சீனாவின் வுஹான் நகரில் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸானது தற்போது மொத்தமாக 30 நாடுகளில் பரவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இந்தியன்-2 படப்பிடிப்புத் தளத்தில் விபத்து; 3 பேர் உயிரிழப்பு,10 பேர் படுகாயம்

(சென்னை)

சென்னையில் படப்பிடிப்பின் போது எதிர்பாராதவிதமாக கிரேன் விழுந்ததில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் வரையில். படுகாயமடைந்தனர்.

சென்னை, பூந்தமல்லி அருகில் உள்ள இ.வி.பி.பிலிம் சிற்றியில் (evp film city) நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இந்தியன்-2 படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த





போது 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் சினிமாத் துறையில் கடும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இந்த விபத்து குறித்து நடிகர் கமல்ஹாசன் மற்றும் நடிகை அதுல்யா உட்பட திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்தனர். தற்போது வந்துள்ள தகவல் படி உயிரிழந்த மூன்று பேரில் ஒருவர் கிருஷ்ணா என்பதுடன் இவர் ஷங்கரிடம் துணை இயக்குநராக பணியாற்றி வந்தவர். (ஜ-2)

# நிர்பயா குற்றவாளி தற்கொலை முயற்சி?

(சென்னை)


நிர்பயா குற்றவாளிகளின் சந்தேகநபர்களில் ஒருவரான வினய் சர்மா, திகார் சிறையில் சுவரில் தலையை மோதிக் கொண்டதால் காயம் ஏற்பட்டுள்ளது.

நிர்பயா குற்றவாளிகளுக்கு மார்ச் 3 ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தண்டனையை இரத்துச் செய்யவும் தள்ளிப் போடவும் குற்றவாளிகள் பலமுறை முயற்சித்தும் அவை அனைத்தும் தோல்வியடைந்தன.

இந்நிலையில் திகார் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது வினய் சர்மா, சுவரில் தனது தலையை மோதியதால், காயம் ஏற்பட்டது. இதனையடுத்து, சிறை அதிகாரிகள் உடனடியாக அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதற்கு முன்னர் சிறையில் உள்ள கிரிலில் தனது கையை கொடுத்து, எலும்பு முறிவு ஏற்படுத்த முயற்சி செய்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பெப்ரவரி 16 ஆம் திகதி நடந்ததாகவும் இது குறித்து வினய்யின் தாய் கேட்டபோதும் அவர் அதை கண்டுகொள்ளவில்லை எனவும் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான புதிய திகதி அறிவிக்கப்பட்டது முதல் அவரது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வினய்



சர்மாவின் சட்டத்தரணி ஏ.பி.சிங் தெரிவித்தார்.

ஆனால் சிறை மூத்த அதிகாரிகள் கூறுகையில், "அண்மையில் நடத்தப்பட்ட மனநிலை சோதனையில் 4 பேரும் நலமாக உள்ளனர். ஆனால் புதிய திகதி அறிவிக்கப்பட்டது முதல் குற்றவாளிகள் 4 பேரும் சிறை காவலர்களிடம் கடுமையாக நடந்து வருகின்றனர்.

அவர்களின் செயற்பாடுகளில் மாற்றம் வந்துள்ளது. மற்றவர்களுடன் பேசுவதை குறைத்துக் கொண்டுள்ளனர். உணவு சாப்பிட மறுத்து வருவதால், அவர்களை சமாதானப்படுத்தி சாப்பிட வைத்து வருகிறோம். குற்றவாளிகள் 4 பேரும் தற்கொலை முயற்சியில் ஈடுபடக்கூடாது என்பதற்காக அவர்களின் அறையில் சி.சி.ரி.வி.கமரா பொருத்தப்பட்டு, 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறோம்" என தெரிவித்துள்ளனர். (ஜ-2)

# டயமண்ட் பி… கப்பலில் கொ… இரு முதியவர்க…

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் இருவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த இருவரும் 80 வயதையுடைய முதியவர்கள் என ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஹொங்கொங் நகரத்தில் இருந்து கடந்த வரரம் 'டயமண்ட் பிரின்சஸ்' என்ற சொகுசு கப்பல் ஜப்பானுக்கு



பயணித்தது. இந்தக் கப்பலில் மொத்தம் 3,711 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்தக் கப்பலில் ஆறு பயணிகள், 132 பணியாளர்கள் என

# ஈரானுடனா…

(டெஹ்ரான்)

ஈரானுடனான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா எப்போதும் தயாராக இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்தார்.

இது குறித்து மைக் போம்பியோ தெரிவிக்கையில், "ஈரானுடனான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா எந்நேரமும் தயாராக இருக்கிறது. ஆனால், ஈரானின் நடத்தையில் மாற்றம் தேவைப்படுகிறது.

அதுவரை ஈரான் மீதான அழுத்தங்கள் தொட

# துருக்கி இ…



# வெளிநாடு

## ...ட் பிரின்சஸ் ... கொரோனா ...வர்கள் உயிரிழப்பு

வக் / னா / சை / ரி / தை / ன் / ந்து / ஸ்' / க்கு

மொத்தம் 138 இந்தியர்கள் உள்ளனர். 'கொவிட்-19' எனப் பெயரிடப்பட்டுள்ள கொரோனா வைரஸால் பயணிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து, கப்பலில் உள்ளவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தனர். அதில், 500 இற்கும் மேற்பட்டவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து, பாதிக்கப்பட்டவர்களை கப்பலில் இருந்து வெளி



யேற்றி வைத்தியசாலையில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இந்த நிலையிலேயே சிகிச்சை பெற்று வந்தவர்களில், இருவர் உயிரிழந்ததாக ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ஐ-2)

தம் / ட்ட / ந்த / பய / என

## லொறி- பேருந்து மோதல்; 20 பேர் பலி, பலர் படுகாயம்

(சென்னை)

இந்தியா, திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே நேற்று அதிகாலை ஏற்பட்ட வீதி விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

மேலும், காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சுவதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.



மேற்படி விபத்து, பெங்களூரிலிருந்து எர்ணாகுளம் நோக்கி சென்று கொண்டிருந்த அரச பேருந்தின் மீது கோவையிலிருந்து சேலம் நோக்கி சென்ற லொறியொன்று நேருக்குநேர் மோதியதால் ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்தனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. மொத்தம் 48 பேர் பேருந்தில் பயணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ஜேர்மனியில் துப்பாக்கிச் சூடு; எண்மர் பரிதாபமாக உயிரிழப்பு



(பேர்லின்)

ஜேர்மனியில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் பலியாகினர். இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியின் ஹனாவு நகரில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் பலியாகினர். ஹனாவு நகரில் உள்ள 2 பார்களில், தனித்தனியே புகுந்த மர்ம நபர்கள் அங்கிருந்தவர்களை கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இந்தத் தாக்குதலில் 8 பேர் பலியாகினர். 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். தகவல் அறிந்த பொலிஸார், துப்பாக்கிச்சூடு நடத்திய நபர்களை தீவிரமாகத் தேடி வருகின்றனர். பயங்கரவாத நோக்கத்துடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து விசாரணைநடைபெற்றுவருகிறது. (ஐ-2)

## ...னான பேச்சுவார்த்தைக்கு தயார்

### அமெரிக்கா அறிவிப்பு

...த அமெரிக்கா / ...மரிக்க வெளி / ...போம்பியோ / ...ா தெரிவிக் / ...ார்த்தைக்கு / ...இருக்கிறது. / ...ல் மாற்றம் / ...ங்கள் தொட

ரும். இது வெறும் பொருளாதார ரீதியிலான அழுத்தம் மட்டுமல்ல. இதன்மூலம் ஈரான் தனிமைப்படுத்தப்படுகிறது" என்றும் குறிப்பிட்டார்.

எனினும் பேச்சுவார்த்தைகளுக்கான அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடி பணியமாட்டோம் என ஈரான் முன்னரே தெரிவித்திருந்தது.

இதேவேளை, அண்மையில் ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ நிலை மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் பாதுகாப்புப்படை வீரர் உயிரிழந்தார்.

அந்தத் தாக்குதலை ஈரான் ஆதரவு பெற்ற கடாயெப் ஹிஸ்புல்லா படையினர் நடத்தினர். இதற்குப் பதிலடியாக அந்தப் படையினர் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 25 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காபூலிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு ஏராளமான ஹிஸ்புல்லா ஆதரவுப் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அலுவ



லகத்தைத் தாக்கினர்.

அதற்குப் பதிலடியாக பக்தாத் விமான நிலையம் அருகே அமெரிக்க இராணுவம் ஆளில்லா விமானம் மூலம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஈரான் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் வலுத்துள்ளது.

மேலும், அணுவாயுத ஒப்பந்தத்தை மீறி ஈரான் அணு ஆயுத சோதனைகளை நடத்துவதால் அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளையும் அந்நாட்டின் மீது விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ...இராணுவம் சிரியாவிற்குள் ஊடுருவலாம்

### ஜனாதிபதி எர்டோகன் எச்சரிக்கை

(அங்காரா)

துருக்கி இராணுவம் எப்போது வேண்டுமானாலும் சிரியாவிற்குள் ஊடுருவலாம் என அந்நாட்டு ஜனாதிபதி எர்டோகன் எச்சரிக்கை விடுத்தார்.

சிரிய அரச படைகள் ரஷ்யப் படையின் உதவியுடன் இட்லிப் பகுதியிலிருந்த கிளர்ச்சியாளர்களின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றின. இதன் காரணமாக தற்போது சிரிய படைக்கு கூடுதல் பலம் கிடைத்துள்ளது.

குறித்த பகுதியில் தங்கள் கண்காணிப்பு நிலைகளை அமைத்துள்ள துருக்கிக்கு இது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சிரியா-துருக்கி இடையே மோதல் வலுப்பெற்றுள்ளது. 'இந்நிலையில் சிரியாவிற்கு எச்சரிக்கை விடுக்கும் முகமாக துருக்கி ஜனாதிபதி எர்டோகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'இதுதான் எனது கடைசி எச்சரிக்கை. சிரியாவின் இட்லிப் பகுதியில் துருக்கியின் இராணுவம் எப்போது வேண்டுமானாலும் ஊடுருவலாம்.

துருக்கி மீண்டும் அகதிகளை எதிர்கொள்ளும் என்பதால் பாதுகாப்பான இட்லிப்பை உருவாக்குவதில் உறுதியாக இருக்கிறேன்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-2)

# யாழில் கொங்கிறீட் வீட்டுத்திட்டம் மயிலிட்டி வடக்கில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான கொங்கிறீட் வீட்டுத்திட்டம் இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மயிலிட்டி வடக்கு ஜே/246 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அக்கந்தனையில் ஆரம்பித்து வைக்கப்படும் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தெரிவித்தார்.

சுமார் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த வீட்டுத்திட்ட ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

"சர்வதேச பொலிஸாருடன் கலந்துரையாடி சைபர் சட்டம்"

# சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் சமல் தெரிவிப்பு

(கொழும்பு)

**சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் கடுமையான முறையில் சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

'2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களைப் பகுப்பாய்வு செய்கின்ற போதும் குற்றங்கள் குறைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

2018 ஆம் ஆண்டில் 253 வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகியுள்ள போதிலும் 2019 இல் 183 சம்பவங்கள் தான் பதிவாகியுள்ளன.

இத்தகைய குற்றச்செயல்களைத் தடுக்க 498 பொலிஸ் பிரிவுகள் நாடளாவிய ரீதியில் செயற்படுகின்றன. அவற்றின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களும் தொடர்ந்து இணைக்கப்பட்டு வருகின்றனர். அதற்கு மேலதிகமாக சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இவற்றைத் தடுக்கச் செயற்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், சமூகக் குழுக்கள் எனப் பலரும் இவர்களை அடையாளம் கண்டு விழிப்புணர்வு செய்யப்படுகின்றனர்.

பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகங்கள் பொருளாதார காரணிகளை மையப்படுத்தியும் இடம்பெறுகின்றன. சில மாதங்களில் இக்குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன.

சில மாதங்களில் குறைவடைகின்றன. அதன் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அதிகரித்துள்ளன.

எனவே எதிர்காலத்தில் பெண் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேச பொலிஸாருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக சைபர் சட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை 80 வீதம் பூர்த்தி

## சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன்-ரோஹண

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணை 80 வீதம் முழுமை பெற்றுள்ளதாக தெரிவித்த, சட்டம் மற்றும் ஒழுக்காற்று பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, குண்டுத்தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் வெகு விரைவில் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் ஈர்க்கப்பட்டுள்ள அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களை நல்வழிப்படுத்த இந்தியாவில் சிறப்புப் பயிற்சி பெற்ற குழுவினரால் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கையில் இஸ்லாமிய மற்றும் ஏனைய மத அடிப்படைவாதத்தை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள், தாக்குதல்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஒருவருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில். நிறைவு பெற்ற 10 மாத காலத்தில் இலங்கைப் பொலிஸார், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றகரத் தன்மை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பு பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு தெளிவுபடுத்துகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஊடகச்சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பணிப்பாளர் ஜாலிய சேனாரட்ன, குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதராட்சி ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருக்கோ தொலைபேசி செய்து கொண்டிருந்தார். அவர் பேசி முடித்ததும் நான் அவரைப் பார்த்து "இப்போது தொலைபேசி எடுத்தீர்களே... அந்த தொலைபேசி இலக்கம் என்ன?" என்று கேட்டேன்.

அவர் தலையைச் சொரிந்து கொண்டார். ஞாபகம் வரவில்லை! "சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன? என்று கேட்டேன். "மாலதி! என்றார்.

"என்ன சேர் இது வேடிக்கை... கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி பேசின தொலைபேசி இலக்கம் மறந்து போய்விட்டது!... எப்போதோ கல்யாணம் செய்து கொண்ட மனைவி பெயர் மறக்கவில்லை... அதை சரியாக சொல்லிவிட்டீர்களே?" அப்படி என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார்! அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் தப்பில்லை! ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே! ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசி எடுக்கிறோம். அதற்குப்பின் அந்த இலக்கம் அநாவசியம்... அதனாலே மறந்துவிடுகிறோம். இதற்குப் பெயர் "தற்காலிக ஞாபகம்!"

ஆனால் மனைவி பெயர் மறந்துவிட முடியுமா? முடியாது... அது அவசியமான ஒன்று! அடிக்கடி அந்தப் பெயரை உபயோகப்படுத்துகிறோம். அதனாலேயும் அது முக்கியம் என்பதாலேயும் அதை மறப்பதில்லை! இதற்குப் பெயர் "நிரந்தர ஞாபகம்!"

சரி... இந்த தற்காலிக ஞாபகம்... நிரந்தர ஞாபகம் இந்த இரண்டு ஞாபக அளவுகளையும் கட்டுப்படுத்துகிறது எது? மூளைக்குள்ளே நடக்கின்ற மின்சார நடவடிக்கைகள் தான்! தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும்! நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து கொள்ளும்!

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலே...ஒன்று மறைந்தாலும் மறந்தாலும் இன்னொன்று மறைவதில்லை! இப்படிப்பட்ட நிலைமையிலே தான்... "தொண்டையிலே இருக்கு... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது சேர்!" என்றான்.

ஒருத்தருக்கு எந்தத் துறையிலே ஆர்வமும் ஈடுபாடும் அதிகமோ அது சம்பந்தமான ஞாபக சக்தி அதிகமாக இருக்கும். தொழிலை விரும்புகின்ற ஒரு தொலைபேசி இயக்குநருக்கு எண்களெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கும். அது மாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நன்றாக ஞாபகத்திலே இருக்கும். இது ஒரு பக்கம் இருந்தாலும்.

ஒரு மூளை... எண்களைவிட, எழுத்துக்களைவிட படங்களை மிக சுலபமாக ஞாபகத்திலே வைத்துக் கொள்ளும்! புரிந்து கொள்கின்ற தன்மை, அனுபவம், புத்திகூர்மை இது கூடி குறைவதைப் பொறுத்து ஞாபக சக்தியும் ஏறும் இறங்கும்! இப்போது உதாரணத்திற்கு... ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால் அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

இந்த மறதி என்பது எந்த சமயத்திலும் ஒரே பிரச்சினையாக ஆகுது தெரியுமா? உங்களுக்கு வேண்டப்பட்ட ஒருத்தரை ஞாயிற்றுக்கிழமை மாலை சரியாக ஐந்து மணிக்கு கடற்கரைக்கு வரச் சொல்லிவிட்டு... அந்த நேரத்தை மறந்துவிட்டால் அது பரவாயில்லை! வரச் சொன்னதையே மறந்துவிட்டால் தான் நிலைமை மோசம் என்று அர்த்தம்! இப்படி இருந்தால் இது சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்...

ஆமாம்... இதற்கும் மருந்து உண்டு... ஆனால் மூளை குறிப்பிட்ட அளவுக்கும் கீழே இயங்கும் போது நியூரோட்ரான்ஸ் மீற்றர் என்பதை மூளை இரசாயனம் மிகவும் குறைந்து போகும் போது மட்டும் தான் உபயோகப்படும். மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மூளையைப் பொறுத்தவரைக்கும் அதிலே ஞாபகசக்தி உள்ள மூளை, மறதியுள்ள மூளை அப்படி என்றெல்லாம் ஒன்றும் கிடையாதாம்.

நினைவு வைத்துக் கொள்வதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை அப்படி என்று வேண்டுமென்றால் சொல்லலாமாம்! அதனாலே நம் ஞாபகசக்தி என்பதை நம்மிடம் இருக்கிற பயிற்சி முயற்சி இதைப் பொறுத்துத்தான் அமையும்.

ஒருத்தருக்கு... ஒரு பென்சிலை எங்கேயோ வைத்து தேடிக் கொண்டிருந்தார். அப்புறம் என்னமோ தீவிரமா யோசித்து அதை ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டிருந்தார். எதிரிலே உட்கார்ந்திருந்தவர் "பென்சிலைத் தானே தேடிக்கொண்டிருக்கிறீர்கள்...அது உங்கள் வலது காதிலே இருக்கு சேர்!" அப்படி என்றார் இதுக்கு அவர்.

"பென்சிலை வலது காதிலேதான் வைத்திருப்பது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு... ஆனால் எது வலது காது என்பது மறைந்து போய்விட்டது... அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" அப்படி என்றாராம்.

# மத்திய வங்கி மோசடிக்காரர்களின் முகவர்களாகவே ஆட்சியாளர்கள்!

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி மோசடிக்காரர்களின் முகவர் களாகவே ஆட்சியாளர்கள் இருந்து வந்திருக்கின்றனர் என மக்கள் விடுதலை முன்னணி குற்றம்சாட்டியது.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரை யாற்றிய போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நாடா ளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், 'மத்திய வங்கி மோசடிக்காரர்களின் முகவர்க ளாகவே ஆட்சியாளர்கள் இருந்து வந்திருக்கின்றனர். அதனால் அர்ஜுன் மகேந்திரனுக்கோ அஜித் நிவாட் கப்ராலுக்கோ தண் டனை பெற்றுக் கொடுக்கப்போவ தில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அர்ஜுன் மகேந்திரனைப் பாதுகாக்கவும் மொட்டுக் கட்சியினர் அஜித் நிவாட் கப்ராலையும் பாதுகாக்கும் வகை யிலே நாடாளுமன்றத்தில் செயற் படுகின்றனர்.

முன்னாள் பிரதமரின் நெருக் கமானவராக அர்ஜுன் மகேந் திரன் இருந்தார். அதனால் அர ஜுன் மகேந்திரன் அவரது உற வினர்களுக்கு மத்திய வங்கி பிணைமுறிகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தார்.

அதேபோன்று மகிந்த ராஜபக் ஷவிற்கு நெருக்கமான அஜித் நிவாட் கப்ரால் அவரது சொந்தக் காரர்களை மத்திய வங்கி பிணை முறி வழங்கும் நிறுவனங்களுக்கு நியமித்து பாரியளவில் மோசடி களில் ஈடுபட்டார்.

இந்த மோசடிக்காரர்கள் எப்படி தனவந்தர்களாக மாறினார்கள் என தேடிப்பார்த்தால், எமது நாடு எவ்வாறு வறுமை நிலைக்குச் சென்றது என்பதை அறிந்து கொள்ளலாம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அதிகாரபூர்வ இல்லத்தைக்கூட பெற்றுக்கொள்ளாத அமைச்சரவை அமைச்சராக நான் இருந்தேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் வாங்கிப் பயன் படுத்தியதாகக் கூறப்படும் வாகன ங்கள் பற்றி பெரிய எடுப்பில் பேசப்படுகிறது. எனது அமைச்சு பற்றியும் பேசப்பட்டது. நான் அமை ச்சராகியது 2015 ஆம் ஆண்டு.

அப்போது அங்கு இருந்த பழைய வாகனம், அன்றைய முன்னாள் அமைச்சர்கள் வாசு தேவ நாணய க்கார, ஜோசப் மைக்கல் ஆகியோர் பயன்படுத்திய வாகனம் ஆகும்.

உடனடியாக வாகனம் வாங்க நிதி ஒதுக்கீடு இருந்தாலும் நான் வாகனம் வாங்கவில்லை. இர ண்டு வருடம் முடிய 2017 இல் ஒருமுறை பணி காரணமாக நான் யாழ்ப்பாணம் சென்றபோது, எனது வாகனம் நடு வீதியில் நின்று விட் டது. அதன் பிறகே வாகனம் வாங் கும்படி அமைச்சுச் செயலாளர் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

பிறகே வாகனம் வாங்கும்படி நான் சொன்னேன். அதாவது நிதி ஒதுக்கீடு இருந்தும் இரண்டு வரு டம் கழித்து அமைச்சருக்கு கடை சியாக வாகனம் வாங்கிய அமை ச்சு, எனது அமைச்சே என முன் னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம் பாடு, இந்து சமய விவகார அமை ச்சர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். மனோ எம்.பி. மேலும் தெரி விக்கையில், அமைச்சர்க ளுக்கு, அவ்வந்த அமைச்சுக்கள் வாகனம் வாங்குவது என்பது எப்போதும் எல்லா அரசாங்க ங்களிலும் நடைபெறும் ஒரு விடயம்.

இதை வேண்டுமென்றே



நீங்கள் பெரிதுபடுத்துகிறீர்கள். இவ்வாகனங்களை எவரும் வீட் டுக்குக் கொண்டு போவதில்லை. அவை அந்த அமைச்சின் வாகன ங்கள்.

எம் சொந்த வாகனங்கள் அல்ல. அமைச்சரவை இராஜி னாமா செய்த அடுத்த நாளே, நான் என் வாகனங்களை எல் லாம் மீள எனது அமைச்சு செய லாளரிடம் ஒப்படைத்து விட்டேன்.

இன்று யாராவது ஒரு முன் னாள் அமைச்சரின் வாகனங்கள் அந்த அமைச்சுக்களுக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது வாகனங்கள் காணாமல் போய் இருந்தால், அவற்றைத் தேடுங்கள்.

நடவடிக்கை எடுங்கள். ஆகவே இந்த வாகனங்களைப் பற்றிப் பேசும்போது அமைச்சர் ஜோன் ஸ்டன் பெர்னாண்டோ பொறுப் புடன் பேச வேண்டும். பொதுவாக பேசாமல், யார் இன்னமும் வாகன ங்களை மீள ஒப்படைக்கவி ல்லை, யார் என்ன வாகனம் பாவித்தார்கள் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இன்னொரு விடயம் இங்கே பேசப்படுவதில் ஒரு அடிப்படை மயக்கம் உள்ளது. அதாவது, இந்த வாகனங்கள் வாங்கும் நிதி தொகையில் 60 விகிதம் மீண்டும் வரி காரணமாக அரசாங்க திறை சேரிக்குப் போகிறது.

ஒரு வாகனம் 40 மில்லியன் என்றால் சுமார் 30 மில்லியன் மீண்டும் அரசாங்க திறைசே ரிக்கு போகிறது. எனது அமைச் சில் மூன்று சொகுசு வாகனங்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். ஒன்று அமைச்சரான எனது வாகனம்.

அடுத்த இரண்டு வாகனங்கள் எவை? இன்று இந்த ஆளும் கூட்டணியின் தவிசாளர் யார்? முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன. மைத்திரிபால வுக்கு கீழ் இருந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சரே பௌசி. அதேபோல் பிரதி அமைச்சர் அலி சாஹிர் மௌலானா.

இவர்கள் இருவரும் கடைசி வருடத்திலேயே என் அமைச் சுடன் இணைக்கப்பட்டார்கள். இவர்கள் வாங்கிப் பயன்படுத்திய வாகனங்களும் இப்போது எனது கணக்கில் சொல்லப்படுகிறது. ஒரு அமைச்சரவை அமைச்சர் என்ற முறையில் எனக்கு அதிகாரபூர்வ இல்லம் ஒன்றைப் பெற்றுக்கொ ள்ள உரிமை உண்டு. ஆனால், அதைக்கூட நான் பெறவில்லை. அமைச்சராக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி, எனது சொந்த வீட்டில்தான் நான் வாழ்கின்றேன்.

நான் ஒருபோதும் அமைச்சர் களுக்கான அதிகாரபூர்வ இல்லம் ஒன்றைக் கேட்டுப் பெறவே இல்லை. பத்தரமுல்லை மாதிவல யில் அமைந்துள்ள எம்.பிக்களின் விடுதி வீட்டைக்கூட நான் ஒரு போதும் பெறவில்லை. நான் இப் படித்தான் எனது அரசியல் பொதுப் பணிகளை செய்கின்றேன். சொகுசு வாகனங்களை அரசியல் பதவி பெற்ற பிறகுதான் கண்டவனும் நானல்ல. அதேவேளை அரசியல் பதவிகளைப் பயன்படுத்தி சுகம் அனுபவித்தவனும் நானல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலகை அச்சுறுத்தும் கொரோனா தாமரைக்கோபுர திறப்பு விழா தாமதம்



(கொழும்பு)

கொழும்பு, தாமரைக் கோபுரத் தின் பொதுத் திறப்பு விழா நிகழ் வுகள் இடம்பெறுவதில் மேலும் தாமதமடையலாம் என தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாகவே இந்த நிலை ஏற் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துடன் இணைக் கப்பட்ட பெரும்பாலான சீன ஊழி யர்கள் சீன புத்தாண்டு தினத்தை கொண்டாடுவதற்காக விடுமுறை நிமித்தம் சீனாவுக்கு சென்றிருந்த நிலையில், கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அவர்கள் இதுவரையில் இலங்கை திரும்ப வில்லை.

இதன் காரணமாகவே தாம ரைக் கோபுரத்தின் பொது திறப்பு நிகழ்வானது மேலும் தாமதடை யலாம் என இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. (ஜ)

# வான்-லொறி விபத்து; 19 மாணவர்கள் படுகாயம்

(கண்டி)

கண்டி - பன்விலை, மேமலை தோட்டப் பகுதியிலிருந்து டீமலை பகுதியிலுள்ள பாடசாலை ஒன் றிற்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற வானொன்று விபத்துக்கு ள்ளானதில் 19 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

குறித்த வான் எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் நேற்று வியாழக்கிழமை காலை மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் காயமடைந்த 18 மாணவர்களும் மடுல்கலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அத்தோடு விபத்தில் காய ம டைந்த மாணவி, மேலதிக சிகிச் சைகளுக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டார்.

விபத்துக்குள்ளான குறித்த வானில் 37 மாணவர்கள் பயணி த்ததாக தெரிவிக்கும் பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடு த்து வருகின்றமை குறிப்பிடத்த க்கது. (ஜ)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

01

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



கடந்த 30 வருடங்களாக மத்திய அரசாங்கமானது மாகாணசபையின் அதிகாரத்தினை வலுவிழக்கச்செய்துள்ளது. உதாரணமாக பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம். மாகாண வைத்தியசாலைகளினை போதனா வைத்தியசாலைகளாக மாற்றி மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருதல். இதேபோல் மாகாணமட்ட பாதைகளினை A தரத்திலான பாதைகளாக மாற்றுதல், மற்றும் மாகாண பாடசாலைகளினை தேசிய பாடசாலைகளாக மாற்றுதல் போன்ற செயற்பாடுகள் ஊடாக மத்திய அரசாங்கம் மாகாண சபைகளினுடைய அதிகாரத்தினை குறைத்து வந்துள்ளது. மாகாண சபைக்கு உறுதியான எதிர்காலம் இருக்கவேண்டுமாயின் மாகாண சபையினுடைய விடயங்களில் அதன் அனுமதியில்லாமல் மத்திய அரசாங்கம் தலையிடக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்களுக்கும் அப்பால், மாகாண ஆட்சி அமைப்புக்கு தனது திட்டங்களையும் நிர்வாகத்தையும் செய்வதற்கு நிதி தேவைப்படுகிறது. மாகாண அரசின் நிதித்தேவைகள் பற்றி அரசுக்கு சிபார்சு செய்யும் ஒரே கடமை மட்டுமே கொண்ட ஒரு நிதி ஆணைக்குழுவை நியமிக்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் வகை செய்கின்றது. நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். இவ்வாணைக் குழுவின் ஆலோசனையை ஜனாதிபதி ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒவ்வொரு மாகாணத்தின் மாகாண சபைக்கும் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தீர்மானிப்பதுவும் ஜனாதிபதியின் முடிவாகவே இருக்கும். மாகாண சபைகளுக்கு அரச பொது நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியும் மாகாண சபைகளின் வரிகள் மற்றும் கடன் போன்றவற்றின் மூலம் பெறப்படும் நிதியும் ஒவ்வொரு மாகாண சபையின் பொது நிதியில் வைப்பு செய்யப்படும். ஆயினும் ஆளுநரின் ஒப்புதல் இன்றி மாகாண சபை எந்த ஒரு பணத்தையும் பொது நிதியில் இருந்து மீளப் பெற முடியாது. அத்துடன் ஆளுநரின் விதந்துரை இல்லாது மாகாண சபை செலவீனத்தை ஏற்படுத்தும் சட்டங்களை இயற்றவும் முடியாது.

மேலும் ஆளுநரின் ஒப்புதல் இல்லாது வரி விதிக்கும் அல்லது வரிவிலக்களிக்கும் சட்டங்கள் எதனையும் இயற்றும் அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை. மாகாண சபைகளின் செலவீனங்கள் நிதிப் பயன்பாடுகளை கட்டுப்படுத்தும் விதிமுறைகளை ஆளுநர் வகுக்கக் கடமைப்பட்டுள்ளார். குறித்த நிதி ஆண்டுக் காலத்தில் மாகாண நியதிச் சட்டத்தின் மூலம் மாகாண சபையால் அனுமதிக்கப்பட்டாலன்றி முதலமைச்சர் கூட நிதியைப் பெற அனுமதிக்க முடியாது. நிறைவேற்றப்படும் எந்தவொரு நியதிச் சட்டமும் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த பின்னரே அமுலாக்கம் பெறும். எனவே மாகாண சபைக்கு சபையின் நிதி சம்பந்தமான விடயங்களில் சுயமான அதிகாரம் கிடையாது என்பது உண்மை. இந்த விடயத்திலும் கூட பரவலாக்கம் என்ற கருத்தியல் நிதிச் செலவீனத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது.

மாகாணசபையின் அதிகாரம் தொடர்பான அடுத்த விடயம் பாதீடு (வரவு-செலவுத் திட்டம்) சம்பந்தமானது. பாதீட்டினை ஆயத்தம் செய்தல் மற்றும் அதனை முன்வைத்தல் போன்ற விடயங்கள் அரசியல் யாப்பின் மூலம் ஆளுநருக்கு வழங்கப்படடிருந்த போதிலும் ஒரு மரபாக முதலமைச்சரே இதனை செய்கின்றார். ஆனால் இந்த விடயத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையே எப்போதும் பிரச்சினைகள் தோன்றுவதாக கூறப்படுகின்றன.

முதலமைச்சரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களிற்கான மாகாண கூட்டமைக்கப்பட்ட நிதியிலிருந்து பணத்தினை மீளப்பெறும் போது பொதுவாக வடக்கு மாகாண சபையில் ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டதாக கூறப்படுகின்றன. ஆகவே இந்த சகல அதிகாரங்கள் தொடர்பாகவும் சரியாக வரையறுக்கப்பட்ட தெளிவான புரிந்துணர்வு காணப்பட்டால் மட்டுமே இனிவரும் காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் சரியான முறையில் இயங்க முடியும்.

வடக்கு மாகாண சபையை திறம்பட நடத்துவதற்கு முதலீடு செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள், வருமானம் திரட்டும் பொறுப்புக்கள், மத்தி- மாகாணங்களுக்கிடையிலான கொடுக்கல்-வாங்கல்கள், வருமான பகிர்வு ஏற்பாடுகள், வரி நிர்வாகம் மற்றும் பொது செலவீனங்களின் முகாமைத்துவம் என்பன தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கும் வடக்கு மாகாண சபைக்குமிடையில் பரந்துபட்டதொரு கலந்துரையாடல் அவசியமாகும்.

**இக் கட்டுரையின் சுருக்கம்**

**13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபையின் அதிகாரங்களை ஆளுநர் அதிகாரங்கள், சட்டவாக்க அதிகாரங்கள், நிதி அதிகாரங்கள், காணி அதிகாரங்கள், பொலிஸ் அதிகாரங்கள் என வகைப்படுத்தலாம். “அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 ஆவது திருத்தம்” என்ற கட்டுரையின் பகுதி I இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம், வடக்கு கிழக்கு இணைப்பும் பிரிப்பும் மாகாண சபையில் ஆளுநரின் அதிகாரங்கள் போன்றவை விபரிக்கப்பட்டிருந்தது. பகுதி II இல் மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்கள் பற்றி விபரிக்கப்பட்டது. இக் கட்டுரையில் மாகாண சபையின் நிதி அதிகாரங்கள் மற்றும் நிதி நிர்வாகங்கள் பற்றி பல்வேறு ஆவணங்களிலிருந்த தகவல்கள் தொகுக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளன.**

**வடக்கு மாகாண சபையை திறம்பட நடத்துவதற்கு முதலீடு செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள், வருமானம் திரட்டும் பொறுப்புக்கள், மத்தி-மாகாணங்களுக்கு இடையிலான கொடுக்கல்-வாங்கல்கள், வருமான பகிர்வு ஏற்பாடுகள், வரி நிர்வாகம் மற்றும் பொது செலவீனங்களின் முகாமைத்துவம் என்பன தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கும் வடக்கு மாகாண சபைக்குமிடையில் பரந்துபட்டதொரு கலந்துரையாடல் எப்போதும் அவசியமாகும்.**

### அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமானது சட்டமியற்றல் அடிப்படையில் பின்வரும் ஏற்பாடுகளை வழங்குகின்றது.

i.மாகாண சபைகளை அமைத்தல்
ii.மாகாணங்களுக்கான ஆளுநர்களை நியமித்தல்
iii.மாகாணசபை அங்கத்துவத்தை அனுபவித்தல்
iv.முதலமைச்சர் நியமனம் மற்றும் அமைச்சரவை நியமனமும் அதிகாரமும்
v.மாகாணசபைகளின் சட்டமியற்றும் அதிகாரம்
vi.நிர்வாக இயந்திரம் தடைப்படும்போது மாற்று ஒழுங்குகள்
vii.மாகாண உச்ச நீதிமன்றங்களை நிறுவுதல்
viii.நிதி ஆணைக்குழுவை அமைத்தல்.

### 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டம்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாகாணசபைகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டம் வழங்குகிறது.

i.மாகாண சபைகளின் அங்கத்துவம்
ii.மாகாணசபைகளில் கூட்டங்களையும் விடயங்களையும் நடத்துதல்.
iii.மாகாண சபைகளில் நிதி நடைமுறைகள்
iv.மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவை அமைத்தல்
v.பிரதம செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் நியமனம்.

### குடிமக்கள் சார்ந்த வரவு-செலவுத் திட்ட எண்ணக்கரு

ஒரு நாட்டினது சனத்தொகையின் தேவைகளை அங்கீகரிப்பதற்கான ஓர் முக்கியமான சாதனம் வரவு-செலவுத் திட்டமாகும். அது குடிமக்களின் தேவைகளுக்கு சேவையாற்றும் நோக்குடன் ஒன்று திரட்டப்பட்ட வரி செலுத்துவோரின் திரட்டிய நிதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. வரவு-செலவுத் திட்டமென்பது அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்குமான ஒரு கருவியும் கூட. அபிவிருத்தியைப் பொறுத்தவரை வரவு-செலவுத் திட்டம், வரிசெலுத்துவோரின் நிதியைச் செலவிடுதலின் மூலமாக ஓர் நாட்டிலுள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளை சீர்செய்வதற்கும் மற்றும் தனியார் துறை அங்கீகரிப்பதற்குத் தவறிய அபிவிருத்திகள் மீது கவனம் செலுத்துவதற்கும் முனைகிறது.

நிர்வாகத்தைப் பொறுத்த வரை, வரவு-செலவுத் திட்டமானது வரி செலுத்துவோரின் நிதியின் பயன்பாட்டை இடைக்கால அறிக்கைகளுடன், சரியானதும் மற்றும் சம்பந்தப்பட்ட தகவல்களுடனும் வருடாந்த அடிப்படையில் பயனுறுதியான வகையில் பதிவுசெய்து கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கின்றது. முகாமைத்துவத்தை பொறுத்தவரை தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் நிதிகளின் ஒதுக்கீடு என்பன வினைத்திறனானதும் மற்றும் ஜனநாயக ரீதியிலுமாக மேற்கொள்ளப்படலாம் என்பதனால் செலவீனங்கள் ஓர் தீர்க்கமான வகையில் ஒருங்கிணைக்கப்பட முடியும். இலங்கையினுள் மூன்று வரவு-செலவுத் திட்டப் பரப்புகள் உள்ளன. அவை தேசிய வரவு-செலவுத் திட்டம் இது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவது. இரண்டாவது மாகாண வரவு-செலவுத் திட்டம் இது மாகாணசபையில் நிறைவேற்றப்படுவது. மற்றும் உள்ளூராட்சி வரவு-செலவுத் திட்டம்.இது உள்ளூராட்சி சபையில் நிறை வேற்றப்படுவது.

### தேசிய வரவு-செலவுத்திட்டம் (நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம்)

இது நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் என பாராளுமன்ற உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்டாலும் மிகவும் பிரபல்யமாக வரவு-செலவுத்திட்டம் என அழைக்கப்படுகின்றது. இலங்கைப் பாராளுமன்றத்தின் வருடாந்தக் கலண்டரில், வருடாந்த வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பித்தலும் அதனைத் தொடர்ந்து வரும் விவாதமும், ஓர் ஆண்டில் பாராளுமன்றம் விவாதிக்கும் சட்டவாக்கம், பிரேரணைகள், தீர்மானங்கள் எல்லாவற்றையும் விட முதன்மை பெறுகிறது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிற சட்ட மூலங்களைப் போன்று வரவு- செலவுத்திட்டமும் முதலாம், இரண்டாம், மூன்றாம் மதிப்பீடுகளைக் (வாசிப்புகள்) கொண்டிருக்கின்றது. அது பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்படும் போது மட்டுமே சட்டமாகின்றது.

வரவு-செலவுத்திட்டம் பிற சட்டமூலமொன்றின் நடவடிக்கை முறைகளைப் பின்பற்றினாலும் கூட அது ஒரு சராசரியான நிதிச்சட்டமூலம் அல்ல. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை, கடந்த ஆண்டுகளில் அதன் செயலாற்றுகை, மேலும் அது மேற்கொள்ள எண்ணியுள்ள புதிய திருப்பங்கள் என்பவற்றைப் பற்றி நாட்டுக்கும், உண்மையில் முழு உலகுக்கும், அறிவிப்பதற்கு நிதியமைச்சர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது ஒரு மரபாகும். எனவே அனைத்து வரி செலுத்துவோருக்கும், வர்த்தக முயற்சியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் அரச நலன்புரி உதவிகளில் தங்கியிருக்கும் மக்களுக்கும் அது முக்கியமானதாகும்.

### வரவு-செலவுத் திட்ட தயாரிப்பின் பிரதான படிமுறைகளின் சாராம்சம் பின்வருமாறு

- நிதியமைச்சு வரவு-செலவுத்திட்ட சுற்று நிருபத்தை, நடப்பாண்டின் முதற்காலாண்டில் வெளியிடும். அமைச்சுக்கள் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் வரவு-செலவு மதிப்பீடுகளை தயாரிக்கின்றன.
- நிதி ஆணைக்குழுவானது, அரசியலமைப்பின் விதிகளுக்கமைய மாகாண சபைகளுக்கான ஒதுக்கீடுகளைச் சிபாரிசு செய்து ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கிறது. திறைசேரி இவற்றை கவனத்தில் எடுக்கிறது.
- நிதி அமைச்சு, வரவு-செலவு மதிப்பீடுகள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் அமைந்துள்ளதை உறுதிப்படுத்த, ஏனைய அமைச்சுக்களோடு கலந்துரையாடல்களை நடத்தும். அவைகள் பின்பு அமைச்சரவையின் ஆய்விற்கும் அங்கீகாரத்திற்குமாக அனுப்பப்படும். முடிவு செய்யப்பட்ட இறுதி மதிப்பீடுகள்,

அரசாங்க வரவு- செலவுத்திட்டத்தில் பற்றாக்கு றையை அல்லது மிகையை எடுத்துக்காட்டும். ஆனால் கடந்த பல தசாப்தங்களாக, ஒன்றுக்குப் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் பற்றாக்குறை வரவு- செலவுத்திட்டங்களையே கொண்டுள்ளன. இம் மதிப்பீடுகள், நிதி அமைச்சரினால் ஒதுக்கீட்டுச் சட்டமூலமாக வரவு-செலவுத் திட்டத்தின் முதல் மதிப்பீடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

பொதுவாக, நடப்பாண்டின் ஒக்டோபர் ஆரம்பப் பகுதியில், நிதியமைச்சர் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதே வழமையாகும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின் அது அடுத்துவரும் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செயலாற்றப்படும்.


(தொடரும்)

# மகா சிவராத்திரி இன்று

மகா சிவராத்திரி மகிமை நிறைந்தது. அன்னை அம்பிகைக்கு நவராத்திரி ஒன்பது நாள் கொண்டாட்டம். அப்பன் சிவபெருமானுக்கு ஒரே ராத்திரி அது சிவராத்திரி. கருட புராணம், அக்னி புராணம், கந்தபுராணம், பத்ம புராணம், அருணாசல புராணம், சிவராத்திரி புராணம் உள்ளிட்ட பல நூல்கள் சிவராத்தியின் மகிமைகளைப் பற்றிப் பலவாறாகக் கூறுகின்றன. சிவராத்திரி நாளில் சிவ ஆலயம் சென்றால் ஓராண்டு முழுக்க சிவபூஜை செய்த புண்ணியம் உங்களை வந்து சேரும். மாதந்தோறும் சிவராத்திரி உண்டு என்றாலும் மாசி மாதத்தில் வருவதே மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது.

சிவாயநம எனச் சிந்திப்போருக்கு அபாயம் ஒரு போதும் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. சிவராத்திரியன்று தம்பதிகளாக கணவன்-மனைவி ஆகிய இருவரும் சிவலிங்க வழிபாடு செய்தால் இல்லறம் இன்பமயமாக திகழும். தம்பதிகள் அந்நியோன்ய அன்பு நிறைந்து இறைவனின் திருவருளால் வளமுடன் வாழ்வார்கள். சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து மகாவிஷ்ணு, மகாலட்சுமியையும் சக்கர ஆயுதத்தையும் பெற்றார். பிரம்மா, சரஸ்வதியை பெறும் பாக்கியம் அடைந்தார். நந்தியம் பெருமான் சிவராத்திரி மகிமை எடுத்துக் கூறியதை அடுத்து முருகன், சூரியன், சந்திரன், மன்மதன், இந்திரன், அக்னி, குபேரன் ஆகியோர் நல்வரங்களைப் பெற்றார்கள் எனப் புராணங்கள் சொல்கின்றன.

சிவராத்திரி நாளில் பல முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் இணைந்து கடைந்த போது பொங்கி வந்த ஆலகால விஷம் மண்ணுலக மக்களை பாதிக்கக் கூடாது என்று எண்ணிய சிவபெருமான், ஆலகால விஷத் தினைத் தனது கண்டத்தினுள் தாங்கி நீலகண்டனாக மாறி உலகத்தை அழிவில் இருந்து காத்தது இந்த சிவராத்திரி நாளில்தான். அன்னை உமா தேவி ஈசனின் கண்ணை மூடியதால் விளைந்த குழப்பத்தை நீக்கிக்கொள்ள விரதமிருந்து பேறுபெற்றதும் இந்தநாளில் தான். சிவனின் இடப்பாகத்தினை அன்னை பார்வதி பெற்ற தினம் இந்த நாள்தான்.



சிவனாரின் திருவடி மற்றும் திருமுடி காணப்புறப்பட்ட திருமாலுக்கும், பிரம்மதேவருக்கும் பாடம் கற்பிக்க நினைத்த சிவபெருமான், லிங்கோற்பவராக பெரும் ஒளிப்பிழம்பாகத் தோன்றி காட்சி அளித்ததும் மகாசிவராத்திரித் திருநாளில்தான். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும், கண்ணப்பர் தனது கண்ணை அளித்து ஈசனிடம் மோட்சம் பெற்றதும் இந்த நாளில் தான்.

பிரம்மா தனது படைப்புத் தொழிலை தொடங்கிய இந்த நாளில்தான், இந்திரன் தேவலோக அதிபதியாக மாறியதும் இந்த நாளில்தான், குபேரன் செல்வத்தின் அதிபதியான நாளும் இந்த நாள்தான். கண்ணப்ப நாயனார் சிவபெருமானுக்காக தனது கண்களை தானமாக அளித்ததும் இந்த நாள்தான். சிவபெருமான் தனது பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனை காலால் உதைத்த தினம் சிவராத்திரி. இன்றைய தினத்தில் விரதம் இருந்து சிவ ஆலயம் சென்றால் ஓராண்டு முழுக்க சிவ பூஜை செய்த புண்ணியம் உங்களை வந்து சேரும்.

சிவராத்திரி நாளில் விடிய விடிய நான்கு ஜாமங்களிலும் நான்கு கால பூஜை நடத்த வேண்டும். வாசனை மலர் அலங்காரத்தை விடவும் வில்வ அர்ச்சனையே பூஜைக்கு ஏற்றது. இந்த விரதத்தின் பெருமையை வேறு எந்த விரதத்தோடும் ஒப்பிட முடியாது. கோவிலுக்குச் சென்று நான்கு ஜாமப் பூஜைகளில் பங்கேற்க முடியாதவர்கள் இரவு வீட்டிலேயே நான்கு ஜாமங்களிலும் நான்கு காலப் பூஜையை முறைப்படிச் செய்யலாம். வீட்டில் பூஜை செய்பவர்கள் பஞ்சாட்சர மந்திரமான நமசிவாய, சிவாயநம வார்த்தைகளை உச்சரித்த படி இருக்க வேண்டும்.

நான்கு காலப்பூஜைக்கு முன்பாக நடராஜரையும் பிரதோஷ நாயகரான நந்தியம்பெருமானையும் வழிபட வேண்டும்.முதல் ஜாமத்தில் சோமாஸ்கந்தரையும், இரண்டாம் ஜாமத்தில் தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தியையும் மூன்றாம் ஜாமத்தில் லிங்கோற்பவரையும், நான்காம் ஜாமத் தில் ரிஷபாரூடமூர்த்தி (சந்திரசேகரர்)யையும், வழிபட வேண்டும். கண் விழித்திருக்கும் பக்தர்கள் சிவ புராணம், திருவிளையாடல் கதைகள், அறுபத்து மூவர் வரலாறு முதலான சிவ மகத்துவங்களை விபரிக்கும் ஞான நூல்களைப் படிப்பது புண்ணியம் தரும். மறுநாள் அதிகாலை குளித்து விட்டு இறைவனுக்கு நைவேத் தியம் படை த்து வணங்க வேண்டும். ஏழை எளியவர்களுக்கு தானம் செய்து விட்டு சாப்பிட வேண்டும்.

# மகா சிவராத்திரி பூஜை காலங்கள்

**முதல் கால பூஜை இரவு 7.30**
**இரண்டாம் கால பூஜை இரவு 10.30**
**மூன்றாம் கால பூஜை நள்ளிரவு 12.00**
**நான்காம் கால பூஜை அதிகாலை 4.30**

மகா சிவராத்திரி மாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று வருவது மகா சிவராத்திரி.மற்ற எல்லா சிவராத்திரிகளை விடவும் இதுவே சிறப்புடையது. பல்வேறு வகையான பெரிய நலன்களை இது வழங்குவது. மற்ற சிவராத்திரிகளில் பெறும் எல்லா பேற்றையும் இது ஒரு சேர வழங்குவதால் இது மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது.

மகா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் இரவில் பூஜை செய்ய வேண்டும். சிவ பஞ்சாயதனம் கைக்கொண்டவர்கள் இரவில் பூஜையைத் தரித்து நற்பலன் பெறவேண்டும்.

சிவராத்திரியின் போது இரவு நான்கு சாமங்களாகப் பிரிக்கப்படுகிறது. அந்த நான்கு ஜாமங்களிலும் சிவலிங்கத்துக்கு விசேடமாக அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. அந்த ஜாமப் பூசைகளின் போது எவையெவற்றால் வழிபட வேண்டும் என்பதை புனித நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

முதல் ஜாமம்: இந்த முதல் கால பூஜை படைக்கும் தேவன் "பிரம்மா" சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த கால பூஜையில் "பஞ்ச கவ்வியத்தால்" (பசும்பால், பசுந்தயிர், பசுநெய், கோமயம், கோசாணம்) அபிஷேகம் செய்து மஞ்சள் நிற பொன்னாடை அணிவித்தும் தாமரைப் பூவால் அர்ச்சனையும் அலங்காரமும் செய்து பாசிப்பருப்பு பொங்கல் நிவேதனமாக படைத்து நெய் தீபத்துடன் முதல் கால பூஜை ரிக் வேதபாராயணத்துடன் நடத்தப்படுகின்றது.

இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் நம் பிறவி கர்மாக்களில் இருந்து விடுபட்டு நற்பலன்களை அடையலாம்.

இரண்டாம் ஜாமம்: இந்த இரண்டாம் கால பூஜையை காக்கும் தேவன் "விஷ்ணு" சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த காலத்தில் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்தும் சந்தன காப்பு சாற்றியும், வெண்பட்டு அடை அணிவித்து அலங்காரம் செய்தும், அர்ச்சனைகள் செய்தும் இனிப்பு பாயாசம் நிவேதனமாக படைத்து நல்லெண்ணெய் தீபத்துடன், இரண்டாவது கால பூஜை யஜுர்வேத பாராயணத்துடன் நடத்தப்படுகின்றது. இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் தன தானிய சம்பத்துக்கள் சேரும்.

மூன்றாம் ஜாமம்: இந்த பூஜை சக்தியின் வடிவமாக அம்பாள் பூஜிப்பதாகும். இந்த காலத்தில் தேன் அபிஷேகம் செய்தும் பச்சை கற்பூரம் மற்றும் வில்வ இலையைக் கொண்டு அலங்காரம் செய்தும் சிவப்பு வஸ்திரம் அணிவித்தும், ஜாதி மல்லி பூவைக் கொண்டு அர்ச்சனைகள் செய்து "எள் அன்னம்" நிவேதனமாக படைத்து இலுப்பை எண்ணெய் தீபத்துடன் சாமவேத பாராயணத்துடன் பூஜை முடிக்கப்படுகிறது.

இந்தக் காலத்திற்குரிய சிறப்பு என்றால் இதை லிங்கோற்பவ காலம் என்றும் இந்தக் காலத்தில் சிவபெருமானின் அடி முடியைக் காண வேண்டி பிரம்மா அன்ன ஷரூபமாக மேலேயும், மகா விஷ்ணு வராக ஷரூபமாக பாதாள லோகத்தையும் தேடிய சிறப்புடையது இந்தக்காலம்; இந்தக்காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் எந்த வித தீய சக்தியும் நம்மை அண்டாமல் இருக்க சக்தியின் அருள் கிடைக்கும்.

நான்காம் ஜாமம்: இந்த நான்காவது கால பூஜை முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் பூதகணங்களும், மனிதர்களும் அனைத்து ஜீவராசிகளும் சிவபெருமானை பூஜிப்பதாக கருதப்படுகிறது. குங்குமப்பூ சாற்றி, கரும்பு சாறு, பால் அபிஷேகம் செய்தும், நந்தியாவட்டை பூவால் அலங்காரமும், அர்ச்சனையும் செய்து அதர் வண வேதப் பாராயணத்துடன் சுத்தான்னம் நிவேதனமாகப் படைத்தும், தூப தீப ஆராதனைகளுடன் 18 வகை சிறப்பு அலங்கார அபிஷேக பூஜைகள் செய்யப்படுகிறது.

மிக உயர்வான இந்த மகா சிவராத்திரி விரதத்தை இருந்து சிவபெருமானை வழிபட்டு அனைத்துச் செல்வத்தையும் வாழ்வில் மகிழ்ச்சியையும் அடைவோமாக!

## "இணையில்லா இன்ப இறை இரவு"

அடி முடி தேடி முடி அடி காணாத முழு இரவு
ஆண்டவன் அருளை அடியவர் தேடும் இரவு
இயன்றவரை இதயத்தில் இறை அருள் வரும் இரவு
ஈதலிலும் விழித்தலிலும் வழிபடும் நல்ல இரவு
உவகை தரும் உம்பரை மகிழ்விக்கும் நல் இரவு
ஊன்று கோலாம் நம் இறைவன் ஊரெல்லாம் வரும் இரவு
எ(ன)மது வாழ்வில் ஒளி ஏற்றிய தீபமான முழு இரவு
ஏன்? என்று கேட்காமல் விழிக்க வேண்டிய அருள் இரவு
ஐயம் இல்லாமல் ஐயனோடு கலக்கும் ஆன்மீக இரவு
ஒன்றுமில்லா மாயவாழ்வில் எல்லாம் தரும் சிவன் இரவு
ஓடி ஓடி சிவன் தலம் செல்ல வேண்டிய ஒப்பற்ற இரவு
ஔடதமாம் இறைவன் நம்மைக் குணமாக்கும் குளிர் இரவு
ஃ இறுதிவரை இன்பம் தரும் இணையில்லா இன்ப இறை இரவு

காரை.எஸ்.கெங்காதரன்

# மன அடக்கத்தை வலியுறுத்தி ஆன்மீக பலத்தை அதிகரிக்கும் மகா சிவராத்திரி விரதம்

(கொழும்பு)

உலகெங்கும் பரந்துவாழும் இந்துக்கள் மகா சிவராத்திரி விரத தினத்தன்று ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு மன அடக்கத்தையும் ஆன்மீக பலத்தையும் அதிகரிக்கச் செய்து எல்லாம் வல்ல பரம்பொருளின் அருளைப் பெறும் உத்தமமான ஒரு விரத நாளே இந்த மகா சிவராத்திரி விரத நாளாகும்.

இப் புனிதமான - புண்ணியமிகுந்த மகா சிவராத்திரி விரத தினத்தில் எல்லாமக்களும் ஒற்றுமையுடனும் இறை சிந்தனையுடனும் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவருளை வேண்டி அகில இலங்கை இந்து மாமன்றம் பிரார்த்தித்து நிற்கின்றது.

பொலநறுவை புராதன சிவாலயத்தில் வழமைபோல மகா சிவராத்திரி புனித தினத்தில் விசேட பூசை வழிபாடுகளை நடத்த மாமன்றம் ஒழுங்கு செய்துள்ளதுடன் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியிலும் நான்கு சாமங்களும் அபிஷேகங்களுடன் மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறும் என பொதுச் செயலாளர் வே.கந்தசாமி அறிவித்துள்ளார்.(இ-7)

## யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல

# அமெரிக்காவிற்கு மனித உரிமை தொடர்பில் கருத்துரைக்கும் தகுதி கிடையாது -சுதர்ஷினி

(கொழும்பு)

இலங்கையின் 30 வருட கால யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காகவே இராணுவத் தளபதி சவேந்திர சில்வா யுத்த வெற்றிக்குப் பாரிய பங்களிப்பு வழங்கினார்.

பலதரப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அமெரிக்காவிற்கு மனித உரிமை தொடர்பில் கருத்துரைக்கும் தகுதி கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களின் நோக்கங்களுக்கு அமையவே அமெரிக்க இராணுவத் தளபதிக்குப் பயணத்தடை விதித்துள்ளது. இந்த நெருக்கடியை இராஜதந்திர மட்டத்தில் வெற்றிகொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வாழ்க்கைச் செலவுகள் தற்போது அதிகரித்த அளவிலேயே காணப்படுகின்றன. குறிப்பாக மரக்கறி விலையேற்றத்தை குறிப்பிட வேண்டும்.

ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இம்மாதம் மரக்கறியின் விலை குறைவான அளவிலேயே காணப்படுகின்றது.

மரக்கறி விலையைப் பொறுத்த வரையில் மொத்த விலைக்கும், சில்லறை விலைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இடைத் தரகர்களின் செயற்பாடுகளால் பொதுமக்கள் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும்.

30வருட கால யுத்தம் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது அல்ல.

உலகில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பை முற்றாக இல்லாதொழிக்க வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்திற்கு காணப்பட்டது. இது சாதாரண விடயம்.

ஒரு நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அமைப்புக்களுக்கு எந்த நாடுகளும் ஆதரவு வழங்காது. இதில் இலங்கை மாத்திரம் விதிவிலக்கல்ல.

விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு அமெரிக்க இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு பயணத்தடையை விதித்துள்ளது.

பல மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அமெரிக்காவின் மீது சுமத்தப்பட்டுள்ளன. ஆகவே எமது நாடு தொடர்பில் தீர்மானங்களை தன்னிச்சையாக எடுக்கும் அதிகாரம் அமெரிக்காவிற்குக் கிடையாது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மீது அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரையில் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்வில்லை.

இவ்வாறான நிலையில் எவ்வித முன்னறிவித்தல், பேச்சுவார்த்தைகளுமின்றி அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளமை கடுமையான கண்டனத்திற்குரியது. இந்த நெருக்கடியை அரசாங்கம் வெற்றி கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவர்கள் மோதல் ஐவர் படுகாயம்

(பதுளை)

பதுளை மாநகரில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஐந்து மாணவர்கள் காயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாணவர்களின் ஒழுக்கம் குறித்து இடம்பெற்ற வாக்குவாதங்கள் முற்றவே மாணவர்கள் இரு தரப்பாக பிரிந்து மோதல்களில் ஈடுபட்டனர். இம்மோதலில் ஐவர் காயங்களுக்குள்ளானர். பதுளைப் பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பான புகார் பதியப்பட்டுள்ளது. (ஜ)

## சம்பு நாதேஸ்வரத்தில் வர்ணனைப் பேருரை

(சுழிபுரம்)

சுழிபுரம் சம்புநாதேஸ்வரம் அம்பாள் சமேத சம்பு நாதேஸ்வரர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெறும்.

மகா சிவராத்திரியான இன்று தேரேறி அருள்பாலிக்கும் சம்பு நாதேஸ்வரர் தேர்த்திருவிழா வழிபாடுகளை தெய்வீக வர்ணனைப் பேருரையாக ஆசிரியர் செந்நாப்புலவர் மதுரவி காரை எம்.பி.அருளானந்தன் வழங்குவார். (இ)


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1983

### மிதுரன்

குண்டா இருந்தால் "கொலஸ்ட்ரோல்" இருக்குதான்னு கேட்கிறாங்க...
ஒல்லியா இருந்தா "சுகர்" இருக்குதான்னு கேட்கிறாங்க...
கோபமா பேசினா "பிரஷர்" இருக்குதான்னு கேட்கிறாங்க..
சரி, அமைதியா இருக்கலாம்னு பார்த்தா "என்ன! ஏதாவது பிரச்சினையா? ன்னு கேட்கிறாங்களே!!!
என்னத்தை சொல்ல!!!

### சுபி

கடந்த காலத்தை நினைக்காதே
கண்ணீர் தான் வரும்..!
எதிர்காலத்தை எதிர்பார்க்காதே
பயம் தான் வரும்..!
இந்த நிமிடம் இந்த நொடி தான் உண்மை..!



### கவிஸ்னா



வைரஸ் தாக்குதலால்
100 நாடுகளின்
கணனிகள் செயல்
இழந்தன.
தமிழகத்தில்
உள்ள அனைத்து
கணனிகளுக்கும்
நிலவேம்பு கஷாயம்
கொடுக்க அமைச்சர்
உத்தரவு

### ஜெனனி



அழகான பெண்தான்
வாழ்க்கையை
அழகாக்குவாள்
என்று நினைக்கும்
ஆண் முட்டாள்...
அழகிருந்தால் போதும்
ஆணின் அன்பை
பெறலாம் என்று
நினைக்கும்
பெண் அடி முட்டாள்...!

### பபி

காதலித்தால் கவிதை வரும்....
காதலிக்கிறவன் கூட இருந்தா
கடுப்புத் தான் வரும்....



### டிக்சன்

**மனைவி:** ஏங்க, இறந்ததுக்கு அப்புறம் ஆம்பளைங்க எல்லாம் எங்க போவாங்க.
**கணவன்:** சொர்க்கத்துக்குத்தான்.
**மனைவி:** அப்போ நாங்க
**கணவன்:** அத வேற தனியா சொல்லனுமா? நரகத்துக்கு தான்
**மனைவி:** அதுக்கப்புறம் அங்க என்னாங்க ஆவும்?
**கணவன்:** அதுவா எங்களுக்கு அழகிகள் கிடைப்பாங்க உங்களுக்கு குரங்குகள் தான்.
**மனைவி:** என்ன கொடுமை பாருங்க !! உங்களுக்கு இரண்டு இடத்திலேயும் அழகிகள் கிடைக்குது. எங்களுக்கு மட்டும் இரண்டு இடத்திலேயும் குரங்குகள் தான்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாய்ந்தமருது நகர சபைக்கான வர்த்தமானி அறிவித்தல் இடைநிறுத்தம்



(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபையிலிருந்து பிரிந்து சாய்ந்தமருதிற்கு தனியான நகரசபை வழங்குவதற்கு கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன, நாடு தழுவிய ரீதியில் பல பிரதேசங்களில் புதிதாக நகர சபைகளை உருவாக்குவதற்கான தேவை காணப்படுவதால் ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் விசேட வர்த்தமானி வெளியிடாமல் புதிதாக உருவாக்குவுள்ள நகர சபைகள் அனைத்திற்கும் ஒரே வர்த்தமானி வெளியிட கலந்தாலோசிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருது நகர சபை உருவாக்கத்திற்கான யோசனையை 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சராக பதவி வகித்த பைஸர் முஸ்தபா சமர்ப்பித்திருந்தார். இந்தப் பத்திர யோசனைக்கு அமைவாகவே சாய்ந்தமருது நகர சபை உருவாக்கத்திற்கு கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

வெளியிடப்பட்ட வர்த்தமானி மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதாவது நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் புதிதாக நகர சபையை உருவாக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு நகர சபைகள் உருவாக்கப்படுகின்றன. அதனடிப்படையில் பார்க்கும் போது கொழும்பு மாவட்டத்தில் தற்போதுள்ள நகர சபைகளைக் காட்டிலும் மேலதிகமாக புதிய நகர சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.

சாய்ந்தமருது நகர சபைக்கு மாத்திரம் விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்க முடியாது.

நாடு தழுவிய ரீதியில் புதிதாக நகர சபையை உருவாக்க வேண்டிய தேவை காணப்படுவதால் அனைத்து தீர்மானங்களையும் ஒன்றுபடுத்திய வர்த்தமானியே வெளியிடப்படும்.

இதன் காரண மாகவே சாய்ந்தமருது நகர சபை உருவாக்கத்திற்கு ஏற்கனவே விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# டயகம தோட்டத்தில் தீ விபத்து; ஆறு குடியிருப்புக்கள் தீக்கிரை



(டயகம)

டயகம பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டயகம தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 6 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தத் தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 6 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், இந்த வீடுகளில் குடியிருந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டனர்.

பெரும் சிரமத்திற்கு மத்தியில் சுமார் 2 மணித்தியால போராட்டத்திற்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் சில வீடுகளில் இருந்த பெறுமதிவாய்ந்த வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 6 வீடுகள் சேதமடைந்ததுடன், இந்த வீடுகளில் குடியிருந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் டயகம பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகளை அமைப்பதற்கு சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சம்பவ இடத்திற்கு விஜயம் செய்திருந்த மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.பீ.சக்திவேல் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையின் நிலைப்பாடு குறித்து ஜெனிவாவில் 24-ம் திகதி அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் 26 ஆம் திகதி இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பேரவையில் உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமையின் பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு முன்னைய அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற பிரேரணையிலிருந்து முழுமையாக வெளியேறுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது.

இந்நிலையில் அது தொடர்பாக அன்றைய தினம் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# ஒரு தேங்காய் 65 ரூபாய்; விற்பனை செய்ய அரசு தீர்மானம்

(கொழும்பு)

சதொச விற்பனை நிலையத்தினூடாக 65 ரூபாவுக்கு தேங்காயை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளக வர்த்தகம் மற்றும் பாவனையாளர் நலன்புரி இராஜாங்க அமைச்சர் அநுரபிரிய தர்ஷன யாப்பா இதனைத் தெரிவித்தார். அரசாங்கத்தின் தெங்குத் தோட்டங்களின் அறுவடையை மக்களுக்கு சலுகை விலையில் வழங்குவதே இதன் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். சந்தைகளில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 45 ரூபாவுக்கும் 80 ரூபாய்க்கும் இடையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 130 | 200 |
| தக்காளி | 120 | 200 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| கோவா | 120 | 140 | 150 | 140 |
| கரட் | 200 | 200 | 200 | 240 |
| பூசணி | 100 | 140 | 40 | 160 |
| புடோல் | 100 | 130 | 140 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 240 | 200-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 120 | 150 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 130 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 200 | 150 | 220 | 240 |
| பீற்றூட் | 100 | 130 | 140 | 140 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 450 |
| போஞ்சி | 100 | 100 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | — | 100 |
| கீரை - 1பிடி | 30 | 45 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 30-60 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 160 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 140 | 200 |
| முள்ளங்கி | 40 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | 100 |

# மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 170 பேருக்கு டெங்குத் தாக்கம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 170 பேர் டெங்கு தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவிற்கு பொறுப்பான வைத்தியர் வி.குணராஜசேகரம் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையும் 170 பேர் டெங்கு நோயால் தாக்கத்திற்குள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளனர்.

அதன்படி மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் இதுவரை 25 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், குறிப்பிடப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளான ஆரையம்பதி 23, களுவாஞ்சிக்குடி 14, வாழைச்சேனை 25, செங்கலடி 8, காத்தான்குடி 15, ஏறாவூர் 8, வெல்லாவெளி 3, வவுணதீவு 7, பட்டிப்பளை 4, ஓட்டமாவடி 18, கோறளைப்பற்று மத்தி 10, கிரான் 6 வாகரை 4 பேர் என டெங்கு நோய்க்குள்ளானோரின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது. (இ-7)

## விடுகதைகளும் விடைகளும்

- முற்றத்தில் நடப்பாள் மூலையில் கிடப்பாள்.

**துடைப்பம்**

- தொட்டால் சுருங்கி - அதற்குத் தொண்ணூறு கால்.

**மரவட்டை**

- ஊருக்கெல்லாம் ஒரே கூரை - அது என்ன?

**வானம்**

- அரக்கன் தலை - அதோ அந்தரத்தில் தொங்குது.

**திருஷ்டிப் பூசணிக்காய்**

- சாத்தின கதவு இருக்க, ஏத்தின விளக்கு இருக்க, இராத்திரி வந்தது யார்? இசையோடு எழுப்பியது யார்?

**கொசு**

- வாயில் பற்கள் உண்டு கடிக்காது. தலையைப் பிராண்டும் வலிக்காது. அழுக்கை அகற்றும் பூச்சியைப் பிடிக்கும். அது என்ன?

**சீப்பு**

- அடித்தால் அழுவான் பிட்டால் சிரிப்பான்.

**தேங்காய்**

- இரண்டு வீட்டுக்கு ஒரே உத்தரம்.

**மூக்கு**

- பட்டு ரோஜா மலர்ந்தது கிட்டப் போனால் சுட்டது.

**நெருப்பு**

- தட்டுப் போல் இருக்கும் - அதில் சொட்டுத் தண்ணீர் ஒட்டாது.


**தாமரை இலை**

## வட்டமிடுக

Fruits

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | A | W | A | Y | R | Y | A | Y | A | P | A | P | B |
| B | N | E | E | R | L | R | A | B | B | Y | E | E | L |
| N | A | E | B | R | M | R | N | E | A | R | W | A | U |
| B | N | S | A | E | P | E | R | N | N | R | A | I | E |
| R | A | A | P | B | E | B | E | P | E | E | T | B | B |
| S | B | L | B | K | E | P | O | E | A | B | E | N | E |
| E | S | I | R | C | A | S | A | P | T | W | R | K | R |
| E | Y | B | I | A | Y | A | E | E | E | A | M | L | R |
| G | E | R | W | L | O | R | E | P | N | R | E | Y | Y |
| N | P | R | I | B | B | N | M | L | T | T | L | M | M |
| A | A | A | K | C | O | R | E | R | L | S | O | O | N |
| R | R | A | R | M | A | E | L | I | M | E | N | E | C |
| O | G | S | E | G | N | M | P | E | B | R | K | I | T |
| S | P | L | A | E | E | L | P | P | A | B | E | W | I |


RASPBERRY
LIME
BLACKBERRY
BLUEBERRY
WATERMELON
ORANGE
BANANA
PAPAYA
LEMON
KIWI
STRAWBERRY
GRAPE
APPLE







# தன்னம்பிக்கை



ஒரு நாள் நள்ளிரவில் தேசிய நெடுஞ்சாலையில் நண்பர்களுடன் வாடகைக் காரில் பயணம் செய்து கொண்டிருந்தோம். காரில் சாரதி இருக்கைக்குப் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்திருந்த நண்பர் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்தார்.

திடீரென காரை நிறுத்திய சாரதி, தூங்கிக்கொண்டிருந்த என் நண்பரை எழுப்பி கொஞ்சம் பின்னால் சென்று அமருங்கள், நீங்கள் தூங்கி வழிவதை பார்த்தால் எனக்கும் தூக்கம் வருகிறது என்றவுடன் நண்பர் முனகிக்கொண்டு பின் இருக்கையில் வந்து அமர்ந்து மீண்டும் தூங்க ஆரம்பித்தார்.

நான் தூக்கம் வராமல் சாரதி சொன்னதையே யோசித்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு பெரிய தத்துவத்தை எளிதாக சொல்லிவிட்டு தன் பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார் இந்தச் சாரதி. ஆம் அவர் சொன்னது மிகப் பெரிய விடயம் தான்.

நம் குணம், சிந்தனை, செயல் போன்றவை பல நேரங்களில் நம்மை சுற்றி இருப்பவர்களை பொறுத்தே அமைகிறது.

தேனீக்கள் போல நாள் முழுவதும் சுறுசுறுப்பாகச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் நண்பர் பக்கத்தில் இருக்கும் போது நம்மை அறியாமலே நம் உடலில் சுறுசுறுப்புத் தொற்றிக்கொள்கிறது.

உருப்படியாக ஒரு வேலையும் செய்யாமல், என்ன செய்து என்ன ஆகிவிடப் போகிறது என சதா புலம்பிக்கொண்டு வீணாக பொழுதை கழித்துக்கொண்டிருப்பவர் பக்கத்தில் இருக்கும் போது, நாமும் சோம்பேறியாக இருக்க ஆசைப்படுகிறோம்.

இந்தக் காரணத்திற்காகத் தான் வாகனம் ஓட்டும் போது தூங்குபவர்களை பக்கத்தில் வைத்துக்கொள்ள சாரதிகள் விரும்புவதில்லை.

ஒரு திரைப்படத்தில், கதாநாயகன் தான் தொழில் செய்யும் இடத்தில் இருந்து வெகு தூரத்தில் உள்ள ஒரு வாடகை வீட்டிற்கு குடியேறுவார்.

அந்த வீட்டின் சொந்தக்காரர், தொழில் செய்யும் இடத்தின் அருகில் வசிக்காமல் ஏன் இவ்வளவு தூரத்தில் வந்து தங்குகிறீர்கள். உங்களுக்கு தேவையில்லாத பண விரயம் மற்றும் உடல் அலைச்சல் ஏற்படுமே என்று கேட்டார்.

அதற்கு அந்தக் கதாநாயகன் இந்த இடத்தில் தான் பெரும் பணக்காரர்கள் வசிக்கிறார்கள். நானும் அவர்களைப் போலவே பெரும் பணம் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இங்கு இருந்தால் தான் தினமும் அவர்களைப் பார்க்க வேண்டிய சூழல் ஏற்படும்.

நான் சும்மா இருக்க நினைத்தாலும் அவர்களைப் பார்க்கும் போது அவர்களைப் போன்ற வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் மீண்டும் உற்சாகமாக வேலை செய்ய ஆரம்பித்துவிடுவேன்.

அதனால் தான் பணத்தையும் உடல் அலைச்சலையும் பொருட்படுத்தாமல் இவ்வளவு தொலைவில் இருந்தாலும் பரவாயில்லை என்று இந்த குடியிருப்பில் குடியேற விரும்புகிறேன் என்று பாமரத்தனமாகச் சொல்வர்.

எவ்வளவு பெரிய உண்மை அது!

நம் வீட்டிலோ, வேலை செய்யும் இடத்திலோ எதிர்மறை எண்ணம் கொண்ட சிலரை பிடித்தோ பிடிக்காமலேயோ சந்திக்க நேரிடும். அவர்களிடம் கவனமாக இருங்கள். உங்களிடம் ஒட்டிக் கொண்டிருக்கும் கொஞ்சம் சுறுசுறுப்புக்கூட அவர்களால் கெட்டுவிடும்.

அலுவலக நேரம் முடிந்த பிறகு கொஞ்சம் வேலை செய்யலாம் என்று நினைத்தால், ஒரு குரல் கேட்கும். நானும் இப்படித் தான், இந்த அலுவலகத்தில் சேர்ந்த புதிதில் வேலை வேலை என்று கால நேரம் பார்க்காமல் வேலை செய்துகொண்டிருப்பேன்.

ஆனால் இந்த நிறுவனம் எனக்கு எதுவும் செய்யவில்லை. சம்பள உயர்வுகூட சொல்லிக் கொள்ளும்படியாக இருக்காது. பேசாமல் வீட்டுக்குப் போய் குழந்தைகளுடன் பொழுதை கழியுங்கள் என்று கேட்காமலேயே ஒரு அறிவுரை கிடைக்கும்.

விசாரித்தால் தான் தெரியும் அவரது வேலையே ஒழுங்காக வேலை செய்பவர்களை கெடுப்பது என்று. அது போன்றவர்களை சற்றும் யோசிக்காமல் தள்ளி வையுங்கள்.

நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்றால், முதலில் உங்களைச் சுற்றி இருப்பவர்கள் யார் என சிந்தியுங்கள்.

சுறுசுறுப்பானவரா?

தன்னம்பிக்கை கொண்டவரா?

விரக்தி எண்ணம் கொண்டவரா?

வாழ்க்கை மீது நம்பிக்கை இல்லாதவரா?

தக்க நேரத்தில் எடுத்து சொல்லி நம்பிக்கையூட்ட நல்ல மனிதர்கள் இல்லாததால் வாழ்க்கையில் தோற்றவர்கள் பலர்.

பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் கூட தங்கள் பக்கத்தில் இருந்த தவறான எண்ணம் கொண்டவர்களால் சரிந்து போயிருக்கின்றன.

எனவே வாழ்க்கையில் வெற்றி பெற உங்களை சுற்றி சரியான மனிதர்களை வைத்துக்கொள்வது அவசியம்.

எந்த இலட்சியமும் இல்லாமல் சதா வாழ்க்கையை குறை சொல்லிக்கொண்டு பொழுதை போக்குபவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

எவ்வளவு தடைகள் வந்தாலும் துவண்டு போகாமல் மீண்டும் மீண்டும் முயற்சிப்பவர்களைத் தேடித் தேடி நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் பக்கத்தில் இருப்பவர்களால் நீங்கள் உற்சாகம் பெறுவதைப் போல, உங்கள் பக்கத்தில் இருப்பவர்கள் உங்களால் உற்சாகம் பெற வேண்டும் என்று நினையுங்கள்.

உங்களை சுற்றி இருப்பவர்களை நீங்கள் உற்சாகப்படுத்துங்கள். அப்போது தான் உங்கள் அருகில் இருக்க விரும்புவார்கள்.

வாழ்க்கையில் வெற்றி பெற ஒன்றை முடிவுசெய்து கொள்ளுங்கள். உங்களை சுற்றி இருப்பவர்கள் ஒன்று உங்களை உற்சாகப்படுத்துபவராக இருக்க வேண்டும், அல்லது நீங்கள் உற்சாகப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

ஒரு துளி மை பத்து லட்சம் பேர்களை சிந்தனை செய்யத் தூண்டக் கூடியது.

–கார்பீல்டு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விம்மி அழுகின்றார் சிவன் விரதமிருந்து என்ன பயன்

இன்று மகா சிவராத்திரி விரதம். சைவ விரதங்களில் மிகவும் முக்கியமான விரதம் இது.

சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுவதற்கான கதைகள் பல உண்டு.

இதில் முக்கியமானது ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியாகிய சிவனே இந்த உலகின் முழுமுதற் கடவுள் என்பதை ஜீவாத்மாக்கள் உணர்தற் பொருட்டு சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதுதவிர, விழித்திருந்து விரதம் அனுஷ்டிப்பதென்பது நம்மைப் பாதுகாப்பதற்கான முக்கிய நடைமுறை என்பதை எடுத்தியம்புவதற்காகவும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆம், வேடன் ஒருவன் காடு வழி செல்கையில் அவனைப் புலி ஒன்று துரத்தியது.

புலியிடம் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக வில்வ மரமொன்றில் ஏறி இருந்த வேடன், பாதுகாப்பின் நிமித்தம் இரவு முழுவதும் விழிப்பிருந்ததோடு, வில்வமரத்தில் இருந்து இலைகளைப் பறித்துக் கீழே போட்ட வண்ணம் இருந்தான்.

விடிகாலைப் பொழுதில் அவன் கீழே இறங்கிப் பார்த்தபோது, அந்த வில்வ மரத்தின் கீழ் சிவலிங்கம் இருப்பதையும் தான் பறித்த வில்வ இலைகள் சிவலிங்கத்துக்கு அர்ச்சனையாகி இருப்பதையும் கண்ணுற்றான்.

வேடன் விழித்திருந்ததும் வில்வம் பத்திரங்களை சிவலிங்கத்துக்குக் கிடைக்கச் செய்ததும் சிவராத்திரி விரத நாளாகையால், அந்த வேடன் முத்திப் பேரின்பம் பெற்றான் என்பது புராணக்கதை.

இங்கு, வேடனின் விழிப்பு – சிவலிங்கத்துக்கு வில்வம் பத்திரம் அர்ச்சித்தது – முத்திப் பேரின்பம் ஆகிய விடயங்களே கவனிக்கப்படுகின்றன.

ஆனால் உண்மையில் மேற்படி கதையின் உள்ளார்ந்தம் வேறு.

அதாவது பாதுகாப்பு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின், விழித்திருப்பது மிகவும் முக்கியமானது.

ஆம்; எம்மை, எம் இனத்தை, எம் சமயத்தை எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதாயின் விழித்திருக்கும் நோன்பு தேவை என்பதே சிவராத்திரி விரதத்தின் உட்பொருள்.

எனினும் நாம் விழித்திருந்து சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கின்றோமே தவிர, சிவபூமி என்று போற்றப்பட்ட எங்கள் சைவ மண்ணில் – இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் ஆண்ட சிவபூமியில் சைவம் அழிக்கப்படுவதை அறியாமல் விழித்திருந்து விரதம் இருக்கின்றோம். இந்த விரதத்தால் ஏது நன்மை.

அதோ சிவன் விம்மி அழுகின்றார். நாமோ அதைப் புரியாமல் சிவராத்திரி விரதம் இருந்து மறு நாள் தூங்கி விடுகிறோம்.

**அறியாமை எங்களிடம் இருக்கும்வரை சிவனுக்கும் நிம்மதி இல்லை. சைவத்துக்கும் பாதுகாப்பில்லை என்ற உண்மையை இன்றேனும் உணர்ந்து விரதம் செய்க.**

## ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு இம்மாத இறுதியில்

(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு இம் மாதம் 26,27,28 ஆம திகதிகளில் யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களில் இடம்பெறும். அதனை தொடர்ந்து எதிர்வரும் 1ம் திகதி அவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

(ம-10)

## ஜெனிவா தீர்மானத்திலிருந்து விலக அமைச்சரவை அனுமதி வழங்கியது

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின்30/1தீர்மானத்தில்இருந்து விலகும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைக் கூறினார்.

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணைக்கு கடந்த அரசு இணை அனுசரணை வழங்கியது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தாருக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளது.

இதனை கருத்திற்கொண்டு குறித்த தீர்மானத்தில் இருந்து விலக அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்

(ம-3)

## இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்பாடு

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

இது தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியது

விமான நிலையத்திற்கு பிராந்திய விமானங்கள் வரத் தொடங்கியமையை அடுத்து அதனை மேம்படுத்த நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

## ஸ்ரீ ருத்ரயாகம்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று காலை 10.30 தொடக்கம் 11.30 வரை ஸ்ரீருத்ரயாகம் நிகழ்வு நடைபெறவுள்ளது.

(ம)

## யாழ் மத்திய கல்லூரி உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உயர்தரப்பிரிவில் கல்வி கற்ற மாணவர்களில் 2020 ஆவணி மாதம் நடைபெற இருக்கும் உயர்தரப் பரிட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்களை 24.02. 2020 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு அடையாள அட்டையுடன் சீருடையில் கல்லூரிக்கு வருகை தருமாறு மத்திய கல்லூரி அதிபர் சி.க.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

(ம)

## சிவராத்திரி தின உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் வீதி ஈழத்து சீரடி சாயி நாதரின் சிவராத்திரி தின உற்சவம் இன்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும்.

இதில் விசேட ஆராதனைகள் இடம்பெற்று மறு நாள் அதிகாலை 5 மணியளவில் திருமஞ்சன தீர்த்தம் நடைபெறும்.

(ஜ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** காக்கைதீவு சுகந் இன்ரர் நஷனல், கே.கே.எஸ். வீதி நாவலர் வீதி சந்தியிலிருந்து புகையிரதக்கடவை வரை, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி வீதி, Mega Mall Super Market, கார்கில்ஸ் பி. எல். சி, செலிங்கோ லைவ் இன் சுரன்ஸ் லமிற்ரெட், பண்டத்தரிப்பு, பெரியவிளான், டச்சு வீதி - அளவெட்டி, இளவாலை, ஆலடி, வீத்தகபுரம், சேந்தாங்குளம், வேம்பிராய், கனகம்புளியடி சந்தி, சரசாலை, தவசிகுளம், உசன, மிருசுவில், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி, எழுதுமட்டுவாழ், கரம்பகம், விழுபளை, EYS, Tokyo Cement Company(Lanka) Plc, 52 ஆம் படைப்பிரிவு இராணுவ முகாம், பொலிகண்டி, நவிண்டில், நெடியகாடு, கொற்றாவத்தை, உடுப்பிட்டி, கெருடாவில, கம்பர்மலை, தொண்டை மானாறு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம் 2ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அருளாசி

உனது இல்லத்தை இறைவனின் இல்லமாக்கு.

அப்போது அங்கும் ஒளியும் அன்பும் பெருவளமும் இருக்கும்.

உனது உடலை இறைவனின் இருப்பிடமாக்கு.

அங்கு அமைதியும் பேரின்பமும் விளங்கும்.

உனது மனதை இறைவனின் விளையாட்டுப் பொருளாக உணர். நீ அதனுடைய விளையாட்டுக்கள் எல்லாவற்றையும் பார்த்து ஆனந்தமாக அனுபவிப்பாய்.

இவ்வுலகை விளையாட்டாகவும் கடவுளின் சுய காட்சி தான் என்றும் பார்.

அப்போது நீ இருமையற்ற ஆன்மாவில் இளைப்பாறுவாய்.

அருளாசி பலவிதங்களில் உனக்கு வருகிறது.

நீ தாராளமனமுடையவனானால் பெருவளமே உனக்கு அருளாசியாக வருகிறது.

நீ கடினமாக உழைப்பவனானால் மகிழ்ச்சியே உனக்கு அருளாசியாக வருகிறது.

நீ சோம்பேறியானால் கடின உழைப்பே உனக்கு அருளாசியாக வருகிறது.

நீ இன்பத்தை விரும்புபவனானால் உணர்ச்சி வயப்படாத தன்மையே உனக்கு அருளாசியாக வருகிறது.

நீ உணர்ச்சி வயப்படாதவனானால் ஆத்மஞானமே உனக்கு அருளாசியாக வருகிறது.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**முயற்சியானது வளர்ந்து தேயும் சந்திரன் அல்ல. அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருப்பது தான்.**

**-பிளிங்டன் மோசஸ**

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**கந்தர் சஷ்டி கவசம் போன்ற பாராயண நூல்கள் பிறவிப் பிணிக்கு மருந்தாக உதவுகின்றவை. ஒரு மருத்துவன் நோயாளியைப் பார்த்து " நீ ஆசாரத்துடன் தான் மருந்து உண்ண வேண்டும்" என்று சொல்வானா?**

**நோய் வாய்ப்பட்டவர்கள் குளிக்க முடியாமல் இருப்பார்கள். படுக்கையில் படுத்தபடியே பாராயணம் செய்யலாம். அட்சர சுத்தியுடனும் ஆசாரத்துடனும் சொல்வது நல்லது. இயலாத வர்கள் தம் ஆற்றலுக்கு ஏற்பப் பாராயணம் செய்தால் பரங்கருணைத் தடங்கடலாகியப் பரமன் கோபிக்கமாட்டான்.**




## ஆதிபராசக்தியின் பத்து தோற்றங்கள்?

**காளி:** கரிய நீல நிறம் கொண்டவள். வேதத்தில் அதர்வன வேதத்தை குறிப்பவள். மயானத்தில் உறைபவள். வெட்டுண்ட உடல்களை ஆடையாக அணிபவள். அடிமேல் அடி எடுத்து மிக மெதுவாகவும், ஆக்ரோஷமாகவும் நகர்பவள். சிவனை பாதத்திற்கு அடியில் வைத்திருக்கும் குரூரமான அமைப்பு காளியின் உருவம்.


**சின்னமஸ்தா:** தலையற்ற உடலுடையவள். தலை கழுத்து பகுதியில் இருந்துவரும் இரத்தத்தை தனது கைகளில் உள்ள பாத்திரத்தில் பிடிக்கும் உருவம் இவளுடையது. ஆண் - பெண் உடலின் மேல்'நர்த்தனம் ஆடும் நிலையில் காட்சி அளிப்பவள்.

**தூமாவதி:** கைகளில் முறத்துடன் விதவை கோலத்தில் அமர்ந்திருப்பவள். வெள்ளை நிற ஆடையும், நகைகள் இல்லாத விரிந்ததலையும் கொண்டவள். கையில் புகைக்கும் பாத்திரம் உடையவள். கொடுமையான மற்றும் தொற்றும் நோய்களுக்கு காரணமானவள்.

**திரிபுர பைரவி:** பைரவி என எல்லோராலும் அழைக்கப்படுபவள். கழுதையின் மேல் அமர்ந்து குரூரமாக காட்சியளிப்பவள். கருநீல நிறத்தில் உடலும், பெரிய போர்வாள் கைகளிலும் கொண்டவள். முகத்தில் அழகும் உடலில் ஆவேசமும் கொண்ட வித்யாசமான உருவ அமைப்பு கொண்டவள். தசமஹா வித்யாவில் ஒவ்வொரு சக்தியின் உருவங்கள் விளக்கப்பட்டாலும் நிதர்சனத்தில் இவர்களுக்கு உரு கிடையாது. அவர்களின் செயல்களை விளக்கவே உருவம் கொடுக்கப்பட்டுள்ளது! அகிலம் காக்கும் ஆதிபராசக்தி அன்னை திருவடியே போற்றி! போற்றி!!

(முற்றும்)

# கழுகுப் பார்வை படத்தை வெளியிட்ட பி.சி.சி.ஐ.



குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் நிர்மாணிக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ள உலகின் மிகப் பிரமாண்டமான சர்தார் வல்லபாய் படேல் கிரிக்கெட் மைதானத்தின் கழுகுப் பார்வைப் படத்தை இந்திய கிரிக்கெட் நிர்வாகம் தனது டுவிட்டர் ப்க்கத்தில் வெளியிட்டுள்ளது.

இம் மைதானம் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய வகையில் உருவாகியிருக்கிறது இந்த மைதானம். தற்போது அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ள மைதானமே உலகில் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாகும். இங்கு ஒரு லட்சத்து 24 பேர் அமர்ந்து விளையாட்டை கண்டுரசிக்கலாம். அவுஸ்திரேலியாவின் மைதானத்தை பின்னுக்குத் தள்ளும் விதமாக அகமதாபாத் மைதானம் உருவாகி வருகிறது. இதேவேளை பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை ஏற்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவுக்கு 24 ஆம் திகதி செல்லவுள்ளார்.

இந்த வருகையை முன்னிட்டு மொடேராவில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் வல்லபாய் படேல் மைதானத்தில் "நமஸ்தே ட்ரம்ப்" என்ற நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கங்குலியின் சாதனையை முறியடிக்க விராட்டுக்கு 11 ஓட்டங்களே தேவை





டெஸ்ட் போட்டியில் அதிக ரன்கள் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் கங்குலியை பின்னுக்குத் தள்ள விராட் கோலிக்கு இன்னும் 11 ஓட்டங்களே தேவைப்படுகிறது.

நியூசிலாந்து - இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் பேர்ட்டி வெலிங்டனில் இன்று தொடங்குகிறது. இந்தப் போட்டியில் விராட் கோலி 11 ஓட்டங்கள் அடித்தால் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் கங்குலியை பின்னுக்குத் தள்ளி விடுவார்.

சச்சின் டெண்டுல்கர் 15921 ஓட்டங்களுடன் முதல் இடத்தில் உள்ளார். ராகுல் டிராவிட் 13265 ஓட்டங்களுடன் 2ஆவது இடத்தில் உள்ளார். சுனில் கவாஸ்கர் 10122ஓட்டங்களுடன் 3ஆவது இடத்திலும், லட்சுமண் 8781 ஓட்டங்களுடன் 5ஆவது இடத்திலும், சேவாக் 8503 ஓட்டங்களுடன் 6ஆவது இடத்திலும் உள்ளனர். கங்குலி 7212 ஓட்டங்களுடன் 6ஆவது இடத்தில் உள்ளார்.

# சென்னை சுப்பர் கிங்ஸின் துணை கப்டன் வோட்சன்

## ரெய்னா தகவல்



இந்திய அணி வீரரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரருமான சுரேஷ் ரெய்னா தனக்கு துணை கப்டன் பதவி வேண்டாம் எனவும் இந்த முறை வேறொரு நபர் துணை கப்டனாக இருப்பார் என்றும் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் தொடரில் டோனி இல்லாத ஆட்டங்களில், துணை கப்டனாக இருந்த சுரேஷ் ரெய்னா அணியின் தலைவராக இருந்தார்.

இதனால் இந்த முறையும் அவர் தான் துணை கப்டன் என்று கூறப்பட்டது.

ஆனால் சுரேஷ் ரெய்னா ஐபிஎல் தொடர் குறித்து கூறுகையில், கடந்த முறை டோனி விளையாட முடியாத போட்டிகளில் நான் சென்னை அணிக்கு கப்டனாக செயற்பட்டேன்.

ஆனால் அந்த போட்டிகளில் கப்டனாக என்னால் சிறப்பாக செயற்பட முடியவில்லை. அதனால் இம்முறை நான் துணை கப்டனாக செயற்பட போவதில்லை. எனக்கு பதிலாக முன்னணி அதிரடி வீரரான ஷேன் வோட்சன்சென்னை அணிதுணை கப்டனாக செயற்படவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# பட்மிண்டன் போட்டியில் சாய்னா நேவால் இரண்டாவது சுற்றுக்கு முன்னேற்றம்



இந்திய பட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் பார்சிலோனா ஸ்பெயின் மாஸ்டர்ஸ் தொ்டரில் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பட்மிண்டன் தொடர்நடைபெற்று வருகிறது.

இந்திய வீராங்கனை சாய்னா நேவால் முதல் சுற்றில் ஜேர்மனைச் சேர்ந்த யோன்னே லீயை எதிர்கொண்டார்.

இதில் சாய்னா நேவால் 21-16, 21-14 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் எச்.எஸ். பிரனோய் 18-21, 15-21 என நேர்செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

# பாகிஸ்தான் வீரர் அக்மலுக்கு கிரிக்கெட் விளையாடத் தடை



ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் உமர் அக்மலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி பட்ஸ்மன்களில் ஒருவரான உமர் அக்மல் மீதான இலஞ்ச குற்றச்சாட்டு விசாரணை முடியும் வரை, அவர் தொடர்ந்து கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க தடை விதித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

விசாரணை நடைபெற்று வருவதால், இவ்விவகாரம் குறித்து எதுவும் தெரிவிக்க முடியாது எனக்கூறியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், உமர் அக்மல்மீதான தடை உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் கிரிக் கெட் தொடர்பான எந்த நிகழ்வு களிலும் உமர் அக்மல் பங்கேற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது. எனினும், அக்மல் மீதான குற்றச்சாட்டு குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விளக்கவில்லை.

அக்மலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவர் இடம் பெற்றுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் அணியான குவெட்டா கிளேடியட்டர்ஸ் அணி, மாற்று வீரரை சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

29 வயதான அக்மல், கடைசியாக பாகிஸ்தான் அணிக்காக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் விளையாடினார். பாகிஸ்தான் அணிக்காக இதுவரை 16 டெஸ்ட் போட்டிகளிலும் 121 ஒருநாள் போட்டிகளிலும், 84 இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகளிலும் உமர் அக்மல் விளையாடியுள்ளார்.

# மல்யுத்த சம்பியன்ஷிப்பில் இந்.வீரருக்கு வெண்கலம்



டில்லியில் நடைபெற்று வரும் மல்யுத்தம் சம்பியன்ஷிப்பில் இந்திய வீரர் ஆதித்யா குந்து வெண்கல பதக்கம் வென்றார்.

ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டி டில்லியில் நேற்று முன்தினம் தொடங்கியது. நேற்று கிரேக்கோ-ரோமன் பிரிவின் 72 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் ஆதித்யா குந்து வெண்கல பதக்கத்திற்கான சுற்றில் ஜப்பானைச் சேர்ந்த பிராப்ளரை எதிர்கொண்டார்.

இதில் ஆதித்யா குந்து 8-0 என வெற்றி பெற்று வெண்கல பதக்கம் வென்றார். இந்த பதக்கத்துடன் இந்தியா நான்கு பதக்கங்களை வென்றுள்ளது.

# இங்கிலிஷ் கவுண்டி அணியில் புஜாரா



இந்திய டெஸ்ட் அணி பட்ஸ்மேன் புஜாரா இங்கிலிஷ் கவுண்டி அணியான கிளாஸ்டர்ஷைர் உடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியின் சிறந்த பட்ஸ்மேன் புஜாரா. இவர் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட கிளாஸ்டர்ஷைர் கிளப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

இந்த அணிக்காக ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் மே 22 ஆம் திகதி வரை விளையாடுகிறார்.

யார்க்ஷைர், லங்காஷைர், கென்ட், சோமர்செட், எசக்ஸ், சர்ரே ஆகிய அணிகளுக்கு எதிராக விளையாடவுள்ளார்.

கிளாஸ்டர்ஷைர் 1995ஆம் ஆண்டு ஸ்ரீநாத்தை ஒப்பந்தம் செய்திருந்தது. அதன்பின் தற்போதுபுஜாராவை ஒப்பந்தம் செய்து ள்ளது.

"கிளாஸ்டர்ஷைர் அணிக்காக விளையாட கிடைத்த வாய்ப்பு மகிழ்ச்சியளிக்கிறது" என புஜாரா தெரிவித்துள்ளார்.

# வலம்புரி அலுவலகத்தில் உள் நுழை...

கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வலம்புரி – சங்குநாதத்தில் வெளிவந்த ஆலடி மாநாட்டில்; எழுவைதீவு முருகமூர்த்தி வித்தியாலய மாணவர்களை எழுவைதீவு றோமன்கத்தோலிக்கப்பாடசாலைக்கு மாற்றுகின்ற முயற்சியில் தீவகத்தில் உள்ள கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவர் முயற்சி செய்வதாகக் குறிப்பிட்டிருந்தமைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாகக் கூறி, வலம்புரி அலுவலகத்துக்குள் நுழைந்த மேற்படி கத்தோலிக்க மதம் சார்ந்த சுமார் 30 பேர் கொண்ட குழு வலம்புரி அலுவலகத்தையும் வலம்புரி அலு வலக உத்தியோகத்தர்களையும் சாடும் நோக்குடன் உள் நுழைந்ததுடன்,

கத்தோலிக்க மதத்திற்கு எதிராக வலம்புரி நடந்து கொள்வதாகவும் கத்திக் குளறி கலகம் செய்தனர். கூடவே ஆலடிமாநாட்டுச் செய்தியை எழுதியவரை தமக்கு இனங்காட்டவேண்டும் என்றும் அவரைத் தாக்கப்போவதாகவும் அட்டகாசம் செய்தனர்.

மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவை தள்ளி வீழ்த்தி நந்திக்கொடியை காலால் உழக்கிய அதேபாணியில், பிரஸ்தாப குழு வலம்புரிஅலுவலகத்துக்குள்நுழைந்தது.

பிரஸ்தாப குழுவின் அடாவடித்தனம் எல்லை மீறிய நிலையில், பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வலம்புரி அலுவலகத்துக்கு வந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்ட குழுவினரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளைசம்பவத்தை அறிந்த வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகச் செயலாளரும் வலம்புரிக்கு வருகை தந்திருந்தார்.

இதேவேளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கையில்,

குறித்த குழுவில் வந்திருந்த பெண்கள்; ஒரு பாதிரியாரின் பெயரைக் குறிப்பிட்டு அவரே தங்களை இங்கு அனுப்பி வைத்ததாகவும் ஆலடிமாநாட்டில் வந்த செய்தி மற்றும் ஊர்காவற்றுறையில் சைவப் பெயர்களில் உள்ள வீதிகளுக்கு கத்தோலிக்கப் பெயர்களைச் சூட்டுகின்ற செய்தியை வலம்புரி பிரசுரித்தமையாலும் தாங்கள் இங்கு அனுப்பப்பட்ட தாகவும் மற்றும்படி ஆலடி மாநாட் டில் வந்த தகவல்கள் என்ன என்பதே தங்களுக்குத் தெரியாதென்றும் வலம்புரி உத்தி யோகத்தர்களிடம் தெரிவித்தனர்.

எழுவைதீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு வந்த பிரஸ்தாப குழு அங்கிருந்து NA-1810 என்ற இலக்க தனியார் பேருந்தில் வலம்புரி அலுவலகத்துக்கு வந்திருந்தது.

கத்தோலிக்கத்துக்கு எதிராக எழுதினால், வலம்புரியை தாக்குவோம் என்றும் இவர்கள் எச்சரித்திருந்தனர். இவை தொடர்பில் எடுக்கப்படவேண்டிய சட்ட நடவடிக்கை குறித்து வலம்புரி, சட்ட ஆலோசகர்களுடன் ஆராய்ந்து வருகிறது. (ம)

## பாதிரியாருக்கு...

படுத்த வலம்புரி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பில் யாழ் மறை மாவட்ட ஆயரின் கவனத்துக்கும் இவ் விடயம் கொண்டுவரப்படவுள்ளது. (ம)

## ஐ.நாவை நிரா...

தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இருந்து விலகுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் முற்றிலும் தவறானதாகும்.

ஜெனிவா விவகாரம் மாத்திரமல்லாது வெளிவிவகாரக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் தற்போது எடுக்கும் தீர்மானங்கள் முற்றிலும் முரண்பாடான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். (ம)

## உலக சைவ...

இந்து சமய அமைப்புக்களை யும் பங்கேற்கு மாறு இலங்கைச் சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் வேண்டுகோள்விடுத்தார்

இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் இந்தியப் பாரதநாட்டை ஆட்சி செய்கின்ற பிரதமர் நரேந்திர மோடியின் பா.ஜ.க கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ராம்நாத் வேதாந்தியின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முகமாக குறித்த மாநாட்டில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-10)

## எரிபொருள்...

நேற்றையதினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து எரிபொருள் விலைசூத்திரம் செயல்படுத்தப்படவில்லை. இதனால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெரும் இழப்பை சந்தித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

எரிபொருள் விலையைக் குறைப்பதன் மூலம் இந்த இழப்பு ஈடு செய்யப்படும் என்றும், விலைக் குறைப்பால் அதன் முழு நன்மையையும் மக்கள் பெறுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை சீனாவில் தொற்றியுள்ள கொரோனா வைரஸ் காரணமாக சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி கண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வட மாகாணத்தில் சிவில் பணி ஒப்பந்த பொதியை வழங்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் இரண்டாவது ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் சிவில் பணி ஒப்பந்த பொதியை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்த அமைச்சரவையின் தீர்மானம் பின்வருமாறு.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் இரண்டாவது ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் சிவில் பணி ஒப்பந்த பொதி ஒன்றை வழங்குவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளுதல். (ம-3)

## பாராளு மன்ற...

டம் பூர்த்தியடைவதற்கு முன்னரான இறுதிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்காலத்தில் ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்காலப் பாராளுமன்றங்கள், குழுக்கள் மூலம் வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் தொடர்பில் பக்கச் சார்பின்றி செயற்பட வேண்டும் என, அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய அமர்வை அடுத்து மார்ச் 3ஆம் திகதிக்கு சபை ஒத்தி வைக்கப்பட்டது. மார்ச் 1ஆம் திகதியுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## புகைப்படங்கள்...

டுக்கொண்டதன் அடிப்படையிலும் அவர்களின் சுய கௌரவத்தை பாதுகாக்கும் பொருட்டு புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். (ஆ-ர்)

## பான் கீ மூனுடன் மகிந்த அரசு...

தொடர்பாக நடவடிக்கை எடுக்க இணங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை நிகழ்த்திய போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டுக்குள் இருந்த பிரச்சினையை உள்நாட்டில் தீர்த்துக் கொள்ள முடிந்த போதிலும் அந்த பிரச்சினையை அன்றைய அரச தலைவரே சர்வதேசத்திற்கு கொண்டு சென்றார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் வெளியிட்ட கூட்டறிக்கையின் ஊடாக அன்றைய அரசாங்கம் இறுதிக்கட்ட போரில் மனித உரிமை மீறல்கள் நடந்ததாக ஏற்றுக்கொண்டது.

அந்த மனித உரிமை மீறல்களை ஆராய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உட்பட ஆணைக் குழுக்களை ஏற்படுத்த நேரிட்டது.

அன்று நாட்டையும் இறையாண்மையையும் காட்டிக்கொடுத்த நபர்கள் தற்போது படையினர் நாட்டை காட்டிக்கொடுத்துள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர்.

தேசத்துரோகி, ராஜதுரோகி முத்திரைகளை குத்த முயற்சித்து வருகின்றனர்.

அன்றைய ஆட்சியாளர்களின் தவறு காரணமாக தற்போது முழு நாடும் சர்வதேசத்திடம் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது.

இதனால், எந்த தரப்பினர் ஆட்சிக்கு வந்தாலும் அந்த பொறுப்பை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளனர்.

இதில் இருந்து விலக முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ம)

## நீதித்துறையின் மீது அழுத்தம்...

இது சம்பந்தமாக பிரதம நீதியரசர் மீது கடுமையான நம்பிக்கை இருப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கலஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

நீதித்துறையினர் சுதந்திரமாக செயற்பட இடமளித்திருப்பதை அரசாங்கத்தின் பலவீனமாக நினைக்கக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

நீதித்துறையில் தலையிடாது சுதந்திரமாக செயற்பட அவர்களுக்கு இடமளிக்கப்படும் என நான் வாக்குறுதி வழங்கினேன்.

நாங்கள் சட்டமா அதிபர், அதிகாரிகள், குற்றவியல் விசாரணை திணைக்களத்தினர், நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மற்றும் எம்முடன் இருக்கும் கட்சியின் தலைவர்களை பிரதமரின் அலுவலகத்திற்கு அழைத்து எந்த வழக்கை தொடுப்பது என்று தீர்மானங்களை எடுக்க மாட்டோம்.

நீதித்துறை தனது சுதந்திரத்தை சரியாக பயன்படுத்தும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பிரதம நீதியரசர் மீது எங்களுக்கு பெரிய நம்பிக்கை உள்ளது.

அவர் நீதித்துறையின் சுதந்திரத்தை மக்களின் நலன்களுக்காக நியாயமான முறையில் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கின்றோம். நாங்கள் வழங்கியுள்ள சுதந்திரத்தை அரசாங்கத்தின் பலவீனமாக பயன்படுத்த வேண்டாம் எனவும் நான் நினைவூட்டுகிறேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 889
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,669,855/-
வெற்றி இலக்கங்கள் 23 40 49 72 X

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1130
சீட்டிழுப்பு திகதி 20.02.2020 வியாழக்கிழமை
B 38 64 67 76
ரூ.96,749,896
1280

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1649 சீட்டிழுப்பு திகதி 20/02/2020
வெற்றி இலக்கங்கள் 08 35 63 65 H
ரூ. 47,042,644

ராசி அதிர்ஷ்டம்
திகதி 20.02.2020 வெற்றி வாரம் 2775 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் சிம்மம் 23 44 51 55
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,148,844
ரூ.500 பரிசுக்குரிய 3 4 5 5
ரூ.100 பரிசுக்குரிய 7 7 2
டபிள் சான்ஸ் விசேட இல.
21.02.2020 ம் திகதி வெள்ளிக் கிழமை கரு நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இல 1583 திகதி 2020/02/20
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 12 34 48 49

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 20-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2398
A 10 21 46 62

மஹஜன சம்பத
திகதி 2020/02/20
சீட்டிழுப்பு இலக்கம் 4118
W 8 4 3 3 7 7

நீரோகா
திகதி 2020/02/20
சீட்டிழுப்பு இலக்கம் 665
துலாம் 10 23 29 33

## ஐ.நா தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியமையால்

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் இரத்தாகும்

***(கொழும்பு) ஜெனிவா யோசனையில் இருந்து விலகுவதாக அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிமேலி பெச்லட்டுக்கு அறிவித்துள்ளதால், இறுதிக்கட்ட போர் தொடர்பான நீதிப் பொறி முறையை ஏற்படுத்துவது மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாத்தை பரவலாக்குவது போன்ற விடயங்கள் இரத்தாகும் எனத் தெரிய வருகிறது.***

2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா யோசனையில் போர்க் குற்றங்களை எதிர்நோக்கும் படை அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து தண்டனை வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும் எனவும் யோசனையில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஜெனிவா யோசனைக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறவில்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.


ஜெனிவா யோசனைக்கு இணங்கியதன் மூலம் இலங்கைப் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதை கடந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தது எனவும் ஆளும் கட்சி விமர்சனங்களை முன்வைத்துள்ளது.

இதனிடையே ஜெனிவா யோசனையில் இருந்து இலங்கை விலகுவதாக அறிவிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன அடுத்த வாரம் ஜெனிவா செல்ல உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஜெனிவாவை நிராகரித்த

# அரசாங்கத்தின் தீர்மானத்தால் தமிழர்களுக்கு நன்மை உண்டு

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



(கொழும்பு)

47 நாடுகளால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலக எடுத்திருக்கும் தீர்மானத்தினால் சர்வதேசத்தை நாட்டுக்கள் வலிந்து அழைக்கும் நிலை ஏற்படும்.

அதன்மூலம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு வழிபிறக்க இடமிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மோசடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

இலங்கை தொடர்பான ஐ.நா.வின் 30/1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசு தற்போது அதிலிருந்து தாம் விலகுவதாக அறிவித்துள்ளது.

பொறுப்புக்கூறல், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல், நிலங்களை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்றவற்றுக்கே அனுசரணை வழங்கிய இலங்கை அரசு தற்போது அதிலிருந்து விலகியுள்ளது. அரசின் இந்த முடிவை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அத்துடன் அரசின் இந்த விலகல் அறிவிப்பால் தமிழ் மக்களுக்கு நன்மையும் உண்டு. ஏனெனில் ஐ.நா.வின் 30/1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசு தற்போது அதிலிருந்து தாம் விலகுவதாக அறிவித்துள்ளதால் இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கப் போகின்றன. அரசாங்கம் சர்வதேசத்தை வலிந்து அழைத்துக் கொள்ளப்போகின்றது.

அத்துடன் அரசாங்கம் விலகப்போகும் பிரேரணையானது மனித உரிமை பேரவையின் 47 நாடுகளால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகும். அதனால் எதிர்காலத்தில் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தும் வாய்ப்பு இருக்கின்றது. சர்வதேச நாடுகளின் இலங்கை மீதான தலையீடுகள் மூலம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு வழிபிறக்கக்கூடும் என்றும் கூறினார். (ம)

## முதல்நாள் வேலைக்கு சென்ற

# பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு

## நுவரெலியாவில் சம்பவம்

(கொழும்பு)

கடமையை பொறுப்பேற்று முதல் நாள் வேலைக்குச் சென்ற பொலிஸ் அதிகாரி அவர் பயணித்த பஸ்ஸில் மோதி கடமை புரியும் சோதனை சாவடிக் கருகிலேயே பலியான சம்பவம் நுவரெலியா மஸ்கெலியாவில் இடம்பெறுள்ளது

நல்லத்தண்ணி பிரதான வீதியின மவுசாகலைசோதனை சாவடிக்கருகிலேயே நேற்று மாலை 6.30 மணியளவில் இவ் விபத்து இடம்பெறுள்ளது

மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்து வந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான அஜித் வீரசிங்க என்பவர் நேற்று சிவனொளிபாதமலை பருவ காலத்தை முன்னிட்டு விசேட கடமை நிமித்தம் மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் பெயர் பதிவு செய்து விட்டு இரவு நேர கடமைக்காக மவுசாகலை பொலிஸ் சோதனை சாவடிக்கு சென்ற போதே இவ் விபத்தில் சிக்குண்டு பலியானார்

மஸ்கெலியாவிலிருந்து நல்லத்தண்ணி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் பயணித்த குறித்த பொலிஸ் அதிகாரி மவுசாகலை சோதனை சாவடியில் பஸ் சோதனைக்காக நிறுத்தப்பட்டபோது பஸ்ஸிலிருந்து இறங்கிய பொலிஸ் அதிகாரி முன்னால் நடந்து சென்று கொண்டிருக்கையில் பயணிகளை இறக்கிய பஸ்ஸை சாரதி முன்னோக்கி செலுத்திய போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து குறித்த பஸ் பொலீஸ் அதிகாரியின் மீது மோதிக்கொண்டு முன்னோக்கி பாய்ந்து சென்றுள்ளது.

இதன்போது பஸ்ஸில் மோதுண்ட பொலிஸ் அதிகாரி மீது பஸ்ஸின் முன் சில்லு ஏறிய நிலையில் அவர் ஸ்தலத்திலேயே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்

அததோடு பஸ்ஸின் சாரதி கைது செய்யபட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணையை முன்னெடுப்பதாகவும் நல்லதண்ணி மற்றும் மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்தனர். (ம)

**வேலையாட்கள் தேவை**
யாழ்.திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள எமது கட்டிடத்துக்கு
- மேசன் வேலை (நாளாந்தம் 1600/=)
- அனுபவம் உள்ள மாபிள் வேலை தெரிந்தவர்கள்
(C-9300)
தொடர்பு:- 077 105 6694

**வேலைவாய்ப்பு**
யாழ்.திருநெல்வேலியில் (பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில்) உள்ள எமது கணக்காளர் நிறுவனத்துக்கு
1. வரவேற்பாளர் / காரியாலய உதவியாளர் (3Km உட்பட்ட இடத்தில் வசிப்பவர்கள்)
2. கணக்கியல் பயிலுநர்
(C-9300)
தொடர்பு:- 0779530496

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977
உத்தரட்டாதி கிரகபாவம்: 17 1/4
உயரம் 5' 2" சொந்த தொழில் செய்யும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்பிற்கு
தொ.இல: 076 449 6275
(2341)

**பௌதிகவியல்**
T.K.KAJAN B.Sc
077 653 1177 (2276)

**Personal Group Class**
இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.
சி.அங்கதன்
B.Sc (Chem.Spl)
தொடர்பு : 075 436 4510
(2328)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

**சாவகச்சேரியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C-9193)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.